தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் எசன் e.V.

அறநெறிப் பாடசாலை எசன்

Oriantal Fine Arts Academy of Germany



# 25. Jubiläumsfeier

# வெள்ளி விழா மலர்

## 1985-2010



## 16.10.2010

Tamilischer Kultur- und Wohlfahrtsverein Essen e.V.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசன் தமிழர்கலாச்சார நற்பணிமன்றத்தின் வெள்ளிவிழா சிறக்க நல் வாழ்த்துக்கள்!!

# K.G.IMPORTERS

Sequience சாறிகள் , கோலம் - பட்டு சாறிகள் ,மைசூர்சில்க் சாறிகள், சிபோன் சாறிகள், சோலிகிட் சாறிகள்,ஜோயற் சாறிகள் இன்னும் பல சாறிகளும் உள்ளன. புத்தம் புதிய design மசகலி, அனார்கலி பஞ்சாபிகள் மற்றும் **சிறுமிகளுக்கான** சோளிகள், Party focks, skirt&blouse மற்றும் **பெண்களுக்கான** sahara சோளிகள் ,lining துணிகள்,சாறிபாவாடை, skirt, blouse,

battik gown மற்றும் **சிறுவர்களுக்கான** Coat suit , குருதார் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பல புது வகையான நெக்லெஸ் செற், காப்புக்கள், மாலைகள், தோடுகள், பொட்டுக்கள், காற்சங்கிலிகள், முடிமயிர், வெஸ்ற் செயின், Hair clips போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள**உங்கள் தேவை கருதி எங்கள் சேவை தங்கள் இல்லம் நாடி வரும்!!!**



தொடர்புகளுக்கு:- திரு.சிவனேசன்

Tel.: 05436-8662; Handy: 01703135097;

Email: MS.Sivanesan@hotmail.de



***வெள்ளி விழாக்காணும் தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்திற்கு எமது உளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்!***

# அபிராமி றேடர்ஸ் எசன்

அனைத்துவிதமான மளிகைப்பொருட்கள்,கடலுணவு வகைகள்,இறக்குமதிசெய்யப்பட்ட மரக்கறிவகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள், அனைத்தும் மலிவு விலையில் தரம்குறையாத பொருட்களை மனநிறைவுடன் வாங்கிச் செல்ல நாடுங்கள்

# ABIRAMI ENTERPRISE

**Pferdermarkt-9,**
**45127 Essen**
**0049201 / 236925**

உண்மை உழைப்பு உயர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கலாச்சார நற்பணி மன்றம் எசன் e.V

# வெள்ளி விழா மலர்





**Tamilischer Kultur -und wohlfahrtsverein Essen e.V**

## 1985 - 2010

**ஈழவிடுதலைப் போரில்
வித்தாகிப்போன
அனைத்து உறவுகளுக்கும்
புலத்தில் எம்மோடு வாழ்ந்து மறைந்த
உறவுகளுக்கும் இம்மலர்
காணிக்கை.**

**இது ஒரு காலத்தின் பதிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.



**தமிழ்ப் போராட்டங்காரணமாக தாயகம் துறந்து தரணியெங்கும் தஞ்சமடைந்துவாழும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தமிழினம் தள்** ளப்பட்டது. 30 ஆண்டுகாலப்போராட்டம்,முனைப்புடன் எழுந்தது என்பது எமது உரிமைமீட்புக்கே நடந்தது என்பதை உலகநாடுகள் அனைத்தும் அறியும் வண்ணம்,செயற்பட்ட போதும்,வல்லாதிக்க அரசுகள்,மனிதத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு,போராடியவர்களுக்குப் பயங்கரவாதிகள் எனப் பெயரிட்டு இறுதி யுத்தத்தில் தமிழர் எழுந்திருக்க முடியாதவாறு,நசுக்கி அழித்துவிட்ட அநாகரீகச் செயற்பாடு,ஈழத்துமண்ணிலே அரங்கேறியுள்ளது.

ஈவிரக்கமற்ற இச்செய்கையால்,இன்று ஒவ்வொரு தமிழனின் உள்ளமும் மனிதம் எங்கே எனத் தேடுகின்றது,தவிக்கின்றது.விடுதலை வீரர்களையும் **பொதுமக்களையும்,சொத்துக்களையும் அழித்துவிட்டநிலையிலும்,தமிழினத்தின்** சுதந்திர வேட்கையை எவராலும் அழிக்கமுடியாது.

**இன்றையநிலை நாளை மாறலாம் என்ற உறுதியுடன்,மீண்டும் எழுவதற்காக** ஒன்றுபட்டுச் செயற்படும் பணி ஒவ்வொரு தமிழரிடமும் விடப்பட்டுள்ளது.

அன்று 1983 காலச் சிறைச்சாலைச் சித்திரவதைகளையும்,கண்டும்,கேட்டும் **அஞ்சிய தமிழர், பல ஆயிரக்கணக்கில் புலம்பெயர்ந்தனர்.இவர்களில் பலர்** பேர்மனியில் தஞ்சம் அடைந்தனர்.

**இந்நிலையில் புலத்தில் வாழும் இளையோரின் எதிர்காலங்கருதி,தாய்மொழி** கலை,கலாச்சார விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்க,த.க.கழகம் பேர்மனியில் பரவலாக தமிழாலயங்களை உருவாக்கி 20 ஆண்டுகளை கடந்து பணியாற்றுகிறது.

இவ்வகையில் பேர்மனியில் எசன்நகரிலும் 25ஆண்டுகளாகத் தமிழர்கள்வாழ்ந்து வருவது குறிப்பிடப்பட வேண்டியதொன்று.அவர்கள் உழைத்தோம்,உண்டோம், **உறங்கினோம் என வாழாது தாயக உணர்வுடன்,பல முன்னெடுப்புகளை மேற்** கொண்டு வருகின்றனர்.எமது மொழி கலை கலாச்சாரம்,பண்பாடுகளை வளர்க்கும் தமிழாலயத்திற்கு தமது பிள்ளைகளை அனுப்பி வளர்ப்பதோடு,டொச் **மொழியில் உயர்கல்வி கற்றும் வருகின்றனர்.**

எசன் மாநகரில் திரு.விசயன் அவர்களும் அவர் குடும்பத்தினரும்,இங்கு வாழும் தமிழ்மக்களுடன் இணைந்து செயற்பட்டுவருவதை யாவரும் அறிவர்.இவர்களால் முதன்முதலில் பேர்மனி எசன் நகரிலிருந்து வெளியிடப்பட்ட தமிழருவி என்ற தமிழ்ப் பத்திரிகையினால் எசன் மாநகரத்துக்குப் பெருமை சேர்ந்தது. விளையாட்டுத்துறை,பெண்கள் முன்னேற்றத்திட்டம்,மொழி,சமய,கலை கலாச்சார **வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை விசயன் முன்னின்று நடத்திவருகின்றார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள தமிழாலயத்தில் திருமதி.விசயன் பணியாற்றுகின்றார்.இவர்கள், ,தமிழர் கலை கலாச்சார மன்றம் ஒன்றை நிறுவி அதன் 25 ஆவது அகவை நிறைவையும்,புலம் பெயரந்த எசன் தமிழினம் சார்பாக வெள்ளி விழாவாக இணைந்து கொண்டாடவிளைவது மதிப்பளித்துப் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இளைய தலைமுறையினர்,எங்கள் மொழி,கலை கலாச்சாரப்பண்பாடுகளை, அறிந்து புரிந்து வருங்காலங்களில் இவை அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கு உந்துசக்தியாக எசன் மாநகர நற்பணி மன்றமும் இயங்கிவருவது பெருமையளிக்கிறது.

இங்கே வாழும் இளைய தலைமுறையினர்,மேன்மேலும் புத்துணர்வு பெற்று எமது தாயகத்தில் இழந்த அனைத்தையும், இங்கே கட்டியெழுப்பவேண்டும். இதற்காக உழைத்துவரும் விசயன் குடும்பத்தினரையும், இங்குவாழும் தமிழ்ப் பெருங்குடிமக்களையும் வெள்ளிவிழாக்காணும் நன்நாளில் பாராட்டி விழாச்சிறப்புற வாழ்த்துகின்றேன்.

நன்றி

இரா.நாகலிங்கம்
பொறுப்பாளர்
த.க.கழகம் யேர்மனி



விசேட பயிற்றிப்பட்டறையில் மிருதங்க மாணவர்கள்.நடாததுபவர் பாபநாசம் அசோக் ரமணி அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Grußwort der RAA/Büro für interkulturelle Arbeit der Stadt Essen zum 25-jährigen Bestehen des Tamilischen Kultur- und Wohlfahrtsvereins Essen e. V.***

Als die Bitte an mich herangetragen wurde, ein Grußwort anlässlich des 25-jährigen Bestehens des Tamilischen Kultur- und Wohlfahrtsvereins zu schreiben, habe ich mir die alten Akten aus unserem Archiv herausgesucht, um mir die Zeit um das Jahr 1985 noch einmal ins Gedächtnis zu rufen. Beim Durchblättern der alten Vermerke und Zeitungsausschnitte kamen mir dann viele Erinnerungen in den Sinn.

Den ersten Kontakt mit dem Verein hatte ich – damals noch als Geschäftsstelle Ausländerbeirat – im Oktober 1985 mit einigen tamilischen Flüchtlingen, die im Übergangswohnheim Schnitterweg untergebracht waren. Der Verein befand sich zu der Zeit noch in der Gründungsphase, und man hatte uns um Unterstützung gebeten. Damals wurden die Gespräche und die Korrespondenz noch in Englisch geführt, denn die Vereinsmitglieder waren noch nicht lange in Deutschland. Niemand von ihnen hätte damals geglaubt, 25 Jahre später noch immer in Essen zu sein, denn jede und jeder hatte den Wunsch, möglichst schnell in die Heimat, zu Familie und Freunden, zurückzukehren. Leider hat die Wirklichkeit anders ausgesehen, denn die Situation in Sri Lanka hat eine Rückkehr bis heute nicht zugelassen.
Aber die Menschen haben sich mit ihrer Lage arrangiert und das Beste daraus gemacht. Wesentlich dabei war die rege Vereinsarbeit, die sowohl die Verbindung zu den Wurzeln in der Heimat hält, als auch eine Brücke baut zu der Gesellschaft, zu den Menschen hier in Deutschland.
Ich hatte das Glück, den Verein in seiner langen Geschichte mal mehr, mal weniger intensiv zu begleiten und zu erleben, wie mit ehrenamtlichem Engagement ein funktionierendes System geschaffen wird, dass genau diese beiden Ziele erreicht, nämlich seine kulturellen Wurzeln zu bewahren und trotzdem anzukommen in der neuen Lebenswelt.
Lebhaft erinnere ich mich an einige Vereins-Feste, die ich besuchen durfte, und die jedes Mal ein besonderes Erlebnis waren. Ein Zeitungsbericht aus dem Jahr 1986 berichtet über ein Kulturfest und beschreibt die Atmosphäre dort sehr treffend:
*„Die Tamilen zeigen nicht ihre Kultur vor, machen keine Schau. Stattdessen feiern sie mit Freunden“.*
Für die RAA/Büro für interkulturelle Arbeit der Stadt Essen gratuliere ich dem Tamilischen Kultur- und Wohlfahrtsverein und seinem langjährigen Vorsitzenden, Herrn Wijayakulasingam, ganz herzlich zum 25-jährigen Bestehen, und wünsche dem gesamten Verein auch weiterhin viel Schaffenskraft, Erfolg und Freude bei der Arbeit!

Günter Dercks

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசனில் தமிழர்கள்

## 25 ஆண்டுகள்.








இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையால் பூமிப்பந்தெங்கும் சிதறிப்போன பல லட்சம் தமிழர்கள் 1977 க்குப் பின்னர் உலகின் பல நாடுகளிலும் தஞ்சம் அடையத் தொடங் கினர்.ஆனாலும் 1983 யூலை தமிழினத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாரிய இனஅழிப் பைத்தொடர்ந்து புலம் பெயர்தமிழர்களின் தொகை அதிக அளவில் அதிகரித்தது.

இலங்கையரசின் இனமுரண்பாட்டையும்

இனஅழிப்பையும் புரிந்துகொண்ட நாடுகள் பல ஈழத்தமிழர்களை அகதிகளாக ஏற்றுக்கொண் டிருந்த காலம்.எங்கு போவது என்றுதீர்மானிக்க முடியாத சூழலில் வாய்ப்புக் கிடைத்த வகையில் ஏதோஒரு நாட்டுக்குப் போய்ச்சேர்ந் தால் சரி என்கின்ற அளவில் புகலிடம் தேடினர்.

தமிழகம் செல்வதும் அங்கு அரசியல் பிடிக்குள் சிக்கி இன்றுவரை முகாம்களுக்குள் குற் றவாளிகளைப்போல அடைத்துவைத்துள்ள நிலையை அன்றே புரிந்து கொண்டவர்கள், தமிழகம் தவிர்த்து வேறுநாடுகளுக்குப் போனார் கள்.பொருளாதாரமில்லாத மக்களில் பலரும் தமிழகம் செல்வதைத்தவிர வேறு வழியிருக் கவில்லை.இன்றுவரை அவர்களின் வாழ்க்கை துயரம்தான்.

ஆனால் ஐரோப்பிய,கனடா அமெரிக்கா போன்ற நாடுகள் தமது குடிமக்களைப்போலவே,எம்மையும் மதித்து கல்வியையும், வேலைவாய்ப்புக்களையும் தந்தன.இந்த வகையில் யேர்மனியில் 1977 ல் ஆரம் பித்த தமிழர் குடியேற்றம் 1983 ற்குப்பின் வெகுவாக கூடியது.இருப்பினும் சில நகரங்கள் தமிழர்கள் குடியேறுவதை விரும்பியிருக்கவில்லை.1985 ன் ஆரம்ப காலங்களில் தான் எசனில் தமிழர்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.6 மாத விசாவுடனும் அயல் கிராமங்களுக்குப் போவதற்குத் தடையுடனும் வாழ்க் கை ஆரம்பித்தது.எசனில் காட்சொப், றெலிங்கவுசன்,போர்பெக்-அல்ட்ட போட் றொப் போன்ற இடங்களில் உள்ள முகாம்களில் தமிழர்கள் குடியேற்றப்பட்டனர். யேர்மன் மொழியைக் கற்றுத்தர சில தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட் டனர்.

இருப்பினும் ஒழுங்கான விசா முறை இல்லாததாலும் எந்தநேரமும் பிடித்து அனுப்பிவிடுவார்களோ என்ற பயமும்,வந்த கடன்காசை எப்படியாவது அனுப் பிவிடவேண்டும் என்ற தேடலும்,மொழியைக் கற்றல் ஏனைய நாடுகளைப்போல கட்டாயம் ( இப்போது போல்) இல்லாததாலும் யேர்மன் மொழியை கற்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசனில் தமிழர்கள்....



நம்மவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதே யதார்த்தம்.ஆயிரத்தில் ஒருவர்

விதிவிலக்காக இருக்கலாம்.சிலர் உடனடியாக குடியுரிமை தரக்கூடிய நாடுகளுக்கு செல்ல முயற்சித்து பலரும் டென்மார்க்,பிரான்ஸ்,கொலண்ட் போன்ற நாடுகளுக்கும் சென்றனர்.

இது இவ்வாறிருக்க எசனில் தமிழர்கள் தனி வீடெடுத்து வாழ அனுமதிக்கப்படவில்லை.இந்நிலையை போக்கவும் எமது தாயக நிலைமைகளை எடுத்துக் கூறவும், எமக்கான ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும் என்கின்ற எமது ஆலோசனைக்கமைய 1985 ஏப்ரல் மாதம் எமது மன்றம் உருவாக்கப்பட்டது.

இம்மன்றத்தில் பொறுப்பாளராக நானும்,மற்றும் திருவாளர்கள் ஆனந்தன்,தர்மபாலன்,ரவி,பத்மநாதன்,லிங்கேஸ்வரன்,கந்தசாமி,தாசன் பேரின்பம், திருமதிகள்.சறோஜினிதேவி தங்கரட்ணம், சசிகலா

விஜயன் ,மற்றும்,திருவாளர்கள் மதி,சேகர்,சோதி,ஜெயரட்ணம்,இராசரட்ணம், துரைராசா, ராஜேந்திரா,சாம்பசிவம் இராமநாதன் (அமரர்) வைரவநாதன்,குகன் இன்னும் பலரும் இணைந்திருந்தனர்.எசனில் முதலாவதாக வாணிவிழா1985 ஒக்ரோபர் மாதம் சினிற்றர்வெக் முகாமில் இருந்த மண்டபத்தில் நடாத்தப்பட்டது.இவ்விழாவுக்கு வாணிபூசையை வணக்கத்துக்குரிய சிவசிறி சிவசாமிக்குருக்கள் ஜெயந்திநாத சர்மா அவர்கள் நடாத்தி வைத்தார்கள்.இவரை திரு.வைரவநாதன் அவர்கள் அழைத்துவந்தார்கலைவாணியின் அருள் என்ற தலைப்பில் திரு.கந்தசாமி அவர்கள் உரையாற்றினார்.சிறப்பாக நடைபெற்ற இவ்வாணிவிழாவுக்கு முகாமிலிருந்த அனைத்து நாட்டு மக்களும் எசனில் வாழ்ந்த ஏனைய முகாம் தமிழரும் வருகை தந்திருந்தனர்.(படம் இணைப்பு)ஆனால் அன்று யாரிடமும் ஒரு குத்துவிளக்கு கூட இருக்கவில்லை.

ஆம் வாணியின் அருளோடு ஆரம்பித்த மன்றத்தின் பணி முதலாவதாக டியாக்கோனியின் ஆலோசனையின் பேரில், எமது தாயக நிலைமை,நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1985-1986 எசனில் தமிழர்....







யார்? எங்கிருந்து? எதற்காக? வந்திருக்கிறோம் போன்ற வற்றை அயலவர்களுக்குத் தெரியப்படுத்த யேர்மன்மொழியில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு பெரும்பாலும் யேர்மானியர்கள் நிகழ்வுகள் குறித்து மகிழ்ந்தனர்.எம்மைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ள அக்கலாச்சார ஒன்றகூடல் உதவியது என்றால் மிகையில்லை.

இதன் பின்னர்,எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு ஒன்று கூடலில்,நகர பிதா,டியாக்கோனி,கரித்தாஸ் மற்றும் நலன் விரும்பிகள் குறிப்பாக அருட்தந்தை நொய்ஸ்,திரு.திருமதி.கெல்முட் போன்றவர்களின் பிரசன்னத்தில் நாம் தனி வீடுகளில் குடியேறி குழந்தைகளுக்கு கல்வி,மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஆர்வம் காட்டவும் வேண்டுகோள் வைக்கப்பட்டது.பல மணிநேர உரையாடல்களின் பின்னர் தனி வீடு எடுத்து வாழ அனுமதிவழங்கினர்.1985 நவம்பர்மாதம் முதல் வீடுகள் தரப்பட்டன.பத்திரிகைகளும் உதவின. தமிழர்களா உடன் வீடு தருகிறோம் வாருங்கள் என போட்டிபோட்டு வீடுகளைத் தந்து உதவினார்கள்.யெர்மானிய மக்கள்.அவர்களுக்கு எமது நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.இதன் பின்னரான காலப்பகுதியில் தான் ஏனைய கிராமங்களிலும் வீடுகள் வழங்கப்பட்டன.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தமிழகத்தோடு அங்குவாழும் எமது மக்களின் இன்றைய (2010) நிலையை ஒப்பிடுகையில் 100 வீதம் இவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள் அல்லவா.தம்மைப்போலவே எம்மையும் அரவணைத்துக்கொண்டார்கள்.இதற்கு மூலாதாரமாக அமைந்தது கலைவெளிப்பாடுகளுடன் தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துக்கூறிய கலாச்சார விழாத்தான் என்றால் மிகையில்லை.

அடுத்த ஆண்டு மன்றப்பொறுப்பாளராக விளங்கிய திரு.ராஜேந்திராஅவர்களின் தலைமையில் ,எசனில் வாழ்ந்த (1986) அனைத்து தமிழர்களையும் இணைத்து மாபெரும் விளையாட்டுப் போட்டியை 2 நாட்கள் நடாத்தினோம் சகல விதமான விளையாட்டுக்களும்

இடம்பெற்றன.(படங்கள் இணைப்பு) யேர்மன் நாட்டவர்களுடனும் இணைந்து உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடாத்தப்பட்டது.

1988 ம் ஆண்டு,திரு.திருமதி.வேலாயுதம் தம்பதிகளின் அரிய முயற்சியால் தமிழ்ப்பாடசாலை எசன் நகர மத்தியில் அமைக்கப்பட்டது.அப்போது வாழ்ந்த சிறிய தொகைப்பிள்ளைகளோடு ஆரம்பித்து இன்று 100க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் இயங்கிவருகின்றது. 18.10.2008 ல் 20 வது

ஆண்டுவிழாவை சிறப்பாக்கொண்டாடினார்கள்.

திரு.இராமகிருஷ்ணன் அவர்களின் பொறுப்பில் உருவான யேர்மன் தமிழர் நட்புறவுக்கழகம் காற்ட்சொப்பகுதியில் விழாவொன்றினை நடாத்தியிருந்தனர்.பல யேர்மன் மக்கள் கலந்துகொண்டனர்.பின்னர் இவர்கள் நடாத்திய புத்தாண்டுக் கலைமாலை சிறப்பாக கொண்டடாடப்பட்டது (படம் இணைப்பு)இவ்விழாவில் திரு.பாலா அவர்கள் அறிவிப்பாளராக முதலில் அறிமுகமானார்.இம்மன்றத்தினரின் பணிகளும் ஆரம்பகாலங்களில் சமூக கலாச்சார முன்னெடுப்புகளில் முன்னின்றது குறிப்பிடத்தக்கது.மொழிபெயர்ப்புச் சேவைகளில் தமிழர் பலனடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று லக்கி பினான்ஸ் நிறுவனத்தை நடாத்திவருகின்றார்.எமது விழாவுக்கும் அனுசரணை வழங்கியுள்ளார்.

1990களில்,இலங்கைத் தமிழ் மகளிர் மன்றத்தை எதிர்காலச் சந்ததிகளின் நன்மை கருதியும்,தாயக நிலைமைகளை வெளிக்கொணரவும், எமது ஆலோசனை,மற்றும் பொருளாதர உதவியுடனும் திருமதி.கிருஸ்ணவேணி அவர்கள் பொறுப்பில் உருவாக்கியிருந்தோம். திருமதிகள்.சசிகலா விஜயன்,

கௌரி முகுந்தன்,சாந்தி பத்மநாதன் ,சறோஜினிதேவி பாலேந்திரா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும்,இன்னும் பலரும் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கியிருந்தனர்.அரசியல் கட்சிகளை இணைத்து தாயக நிலைமைகள் விளக்கப்பட்டன

இம்மன்றத்தின்மூலம் பல நகரங்களையும் இணைத்து வருடாந்த விளையாட்டுப்போட்டிகளும்,ஒன்றுகூடல்களும் நடாத்தப்பட்டன.

எமது முயற்சியின் பயனாக 15 மாணவர்களுடனும் 3 ஆசிரியர்களுடனும் தமிழ்ப்பாடசாலையொன்று உருவாக்கப்பட்டது(**Beising str.**) ஆசிரியைகளாக திருமதி.சசிமாலா ரவீந்திரா,சிவதாசன் சிவபாதம், செல்வி ராதா ஆகியோரின் பணியில் ஓர் ஆண்டு கடந்த நிலையில் திருமிகு.இரா.நாகலிங்கம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழாலயமாக பிறிதொரு இடத்தில் தொடர்கிறது.

தமிழாலயம் ஆரம்பித்து 7ஆண்டுகள் வரையில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளராக பணியாற்றினோம்..விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்று பலபரிசில்களை வென்றோம்.எமது உதவிப்பணி தொடர்கிறது.பின்னர் திரு.சிங்கம் அவர்களோடு பலருமிணைந்து பயிற்சியளித்து வருகின்றனர்.

இன்று தமிழாலயம் 170 பிள்ளைகளுடன் ஆலவிருட்சமாகி தமிழும் கலையும் நம்மிருகண்களெனப் போற்றி அரும்பணியாற்றி வருகிறது.திரு.தர்மசோதிராசன் நிர்வாகியாகவும்,திரு.சண்முகலிங்கம் உதவி நிர்வாகியாகவும், பணியாற்றுகின்றனர்.உடன் பணியாற்றும் ஆசிரியர்கள்,ஆசிரியைகள் எம்மோடு உடன்வாழ்ந்து அரியசேவையை ஆற்றிவருவதைப் பாராட்டியே ஆகவேண்டும்.

## தமிழருவிப் பத்திரிகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெர்மனில் வாழுகின்ற தமிழர்களின் தேவைகருதியும், இங்குவாழும் தமிழ்மக்கள் தாய்மொழியை பேணவும் கலைஞர்கள் எழுத்தாளர்கள் இளஞ்சந்ததியினர் தாய்மொழி கற்கவும் அவர்களை ஊக்குவிக்கவும் யேர்மனியில் முதன்முதலாக ஒரு தமிழ்ப்பத்திரிகையை ஆரம்பிக்க முடிவெடுத்தேன். பத்திரிகைக்கு என்ன பெயர் சூட்டலாம் என நானும் நண்பர் கல்விராஜன் அவர்களும் 3 நாட்களாகச் சிந்தித்தோம். பத்திரிகையின் பெயர் முன்பகுதி தமிழ் என வரவேண்டும் என முதலே தீர்மானிக்கப்பட்டது. மிகுதிப்பகுதி அருவி என பல தேடல்களுக்குப் பின்னரே அமைந்தது.

## வெளியீடு:

தமிழருவி-வெளியீடு

எசன்-1992

1992 ´ம் ஆண்டு ஆவணி 30 ம் திகதி, தாயக உறவுகளுக்காக நடாத்தப்பட்ட தமிழகக் கலைஞர்கள் பங்கேற்ற விழாவில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

பல வாசகர்களை குறுகிய காலத்துள் தன்வசப்படுத்திய தமிழருவியில் 2ம்பக்கம் பிரசித்தமானது.காரணம் யேர்மனியல் நடைபெறுகின்ற அனைத்து நிகழ்வுகளையும் என்ன?எங்கே? எப்போது? என்ற தலைப்பில் முற்கூட்டியே தந்தது.jhd;.தமிழருவி மூலம் பல எழுத்தாளர்கள் இனங்காணப்பட்டனர்.பல இளைஞர்கள் கவிதை,கட்டுரை சிறுகதை என எழுதினர். தாயக நிலைமைகளை எமது மக்கள் அறிந்துகொள்ள தமிழருவி தன்பணியைச்செய்தது.

ஆண்டு விழாவுக்காக கவிதைப்போட்டி,கட்டுரைப்போட்டி, சிறுகதைப்போட்டி, என எழுத்தாளர்களை ஊக்குவித்து தங்கப்பதக்கம் அணிவித்து மகிழ்ந்தது.

ஆண்டுதோறும் இசைத்திருவிழாக்களை நடாத்தி இளங்கலைஞர்களை பல் துறையிலும் கௌரவித்தது.தங்கப்பதக்கங்கள் தந்து சிறப்பித்தது.பிரதம விருந்தினர்களாக திருவாளர்கள் பீற்றர் சல்க்,பேராசிரியர் இர.ந.வீரப்பன்

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், ஐ.நா புகழ் வைகுந்தவாசன், யேர்மனியில் புகழ்பெற்ற எழுத்தாளர்கள்,சமூக சேவையாளர்கள் மூத்த கலைஞர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

யேர்மனியில் சஞ்சிகை ஆசிரியர்கள் பூவரசு இந்து மகேஷ் எழிலன்,மகேந்தி,ஆசிரியர் கமலநாதன் கணேசலிங்கம் ஈரிஆர். ரவீந்திரன்,கற்றிங்கன் ரவி ,ராட்டிங்கன் செல்வகுமார்,வீ.ஆர்வரதராசா,கவிஞை கோசல்யா,விக்னா,பாக்கியநாதன்,மலரும்மாலைகள் சிவநேசன், பாடகர் பரமேஸ்,சிறிபதி , சிறுகதை எழுத்தாளர் -அறிவிப்பாளர் பாலா ,கவிஞர் சங்கர் புஷ்பா, இன்னும் பலர் பாராட்டி

ஊக்குவிக்கப்பட்டனர்.இசைக்கலைஞர்கள் வாத்தியக் கலைஞர்கள், நடனக்கலைஞர்கள், தாயகப்பாடல்கள் பாடுவோர், சுயமாக இயற்றி இசையமைத்துப் பாடியோரும் கௌரவிக்கப்பட்டனர்.அறிவிப்பாளர் என்.ரி.ஜெகன் எமது விழாவை பல மணித்தியாலயங்கள் 7 ஆண்டுகளும் தொகுத்து வழங்கி பெயர்கொண்டார்.

ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு நிதியின் அவசியம் குறித்து யாவரும் அறிவர்.இந்த வகையில் நகரசபையின் உதவி ஆரம்பம் முதலே பத்திரிகை விற்பதானல் மறுக்கப்பட்டது.அதனால் பல சிரமங்களை எதிர்கொண்டோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார ஸ்தாபன நண்பர்கள் சிலர் உதவினர். எசனில் திருவாளர்கள் அன்ரன்,சிவஅருள் டோட்முண்ட் செந்தில் (அமரர்) அருளம்பலம், பிறைட்டன், போன்றோர் விளம்பரங்கள் கொடுத்தனர்.,ருப்பினும் பாரிய நிதிச் செலவை எமது தனி உழைப்பைக் கொண்டே 7 ஆண்டுகள் தமிழருவியை வெளியிட்டோம்.இதனால் பாரிய பொருளிழப்பை எமது குடும்பமே சுமந்தது. செலவுகளை நம்பாதசிலர் உண்மையறிந்து வியந்தனர்.சிலர் சரீர உதவி செய்தனர்.

இருப்பினும் தமிழுக்காக செய்த தொண்டால் ஆத்மதிருப்த்தியைப் பெற்றுக்கொண்டோம். தாயகத்திலும் தமிழருவி பேசப்பட்டது.தலமையகத்தில்

பத்திரிகையைப் பார்த்ததாக சிலர் கட்டுரைகளில் குறிப்பிட்டனர்.எனது துணைவியார் (தமிழாசிரியை)திருமதி.சசிகலா மற்றும் சகோதரி சசிமாலா ரவீந்திரா (ஆசிரியை) தட்டச்சு செய்து உதவினர்.செய்திகள் சேகரித்தனர்.எசன்பாலாஅவர்கள் பல சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதினார்.செய்திகளை சேகரித்தார்.திரு.கேரி.கணேசலிங்கம் தமிழருவியின் உலகத்தொடர்பாளராகப் பணியாற்றினார்.திருஇரவி (ஈரிஆர்) அவர்கள் விழாக்களின்போது பல ஒழுங்கமைப்புகளைச் செய்தார்.இவர்களோடு திருவாளர்கள் சூரி ,நவம் தவம், பேரின்பம், பாலா போன்றோர் விழாக்களை ஒளிப்பதிவு செய்வதில் உதவினர்.

விழாக்களில் 2-3 ஆயிரம் மக்கள் 7ஆண்டுகளாகக: கண்டு களித்த ஒரே விழா தமிழருவி இசைத்திருவிழா தான் என்பதும் ஐரோப்பாவில் தொடராக 18 மணித்தியாலங்கள் ,7 ஆண்டுகள் நடைபெற்றது என்று இன்றும் மக்கள் பேசிக்கொள்வது உண்டு..

அக்காலத்தில் இணையத்தளங்கள்,வானொலிகள் இல்லை பாரீசில் ஈழநாடும்,யெர்மனில் தமிழ்அருவியும் செய்திவழங்கலில் முன்னின்றன.பாரிய பொருட்செலவில் செய்திகள் சேகரிக்கப்பட்டன.

விபரிப்பின் இடம்போதாது.பல பக்கங்கள் தேவை. சில விடயங்கள் தெரியப்படுத்தல் அவசியம் குறித்துத் தரப்பட்டது. 1999ல் பத்திரிகையின் வருகை தடைப்பட்டாலும் எமது தமிழ்ப்பணி பல வழிகளில் தொடர்வதை யாவரும் அறிவர்.

எசன் மகளிர் மன்றத்தின் பணிகள் இன்று திருமதி.சறோஜினி தங்கரட்ணம் அவர்களின் பொறுப்பில் இடம் பெற்றுவருகின்றன.

மேலும் திருமதி..ஜெயந்தி சூரி அவர்களின் பொறுப்பில் தமிழ்ப்பெண்கள் அமைப்பு தமது சிறப்பான பணிகளை எமது மக்களுக்காக ஆற்றிவருகிறது.கலை கலாச்சாரப் பணிகளையும் முன்னெடுத்து வருகிறது.பாரதி கலைக்கூடம் கலைவகுப்புகளை நடாத்தி வருகிறது.பொறுப்பாளராக திரு.லோ.வலண்டைன் அவர்கள் பணியாற்றுகிறார்கள்.தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தால் நடாத்தப்படும் வகுப்புகளின் விபரங்கள் மலரில் தொடர்கின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேர்மனியிலேயே முதன்முறையாக எசனில் Rosen Montag நிகழ்வு ஊர்வலத்தில் தமிழரின் கலைகலாச்சார வெளிப்பாடுகளுடன் கூடிய ஊர்தியை அலங்கரித்து,மேள தாளம் காவடி,கரகம் வினோத உடை இவற்றோடு தாயக நிகழ்வுகளை வெளிப்படுத்தி, லட்சக்கணக்கான மக்கள் நேரிலும்,தொலைக்காட்சி வழியாக பலலட்சம் மக்களும் கண்டு களித்தனர்.பத்திரிகைகளிலும் தகவல்கள் வெளியாகின. (2000, 2001) படங்கள் இணைப்பு)

ஊர்தியை அலங:கரித்ததில் திரு.பால்ராஜ் அவர்கள் மிக உற்சாகமாகப் பணியாற்றினார். பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் திரு.நவாலியூர: மோகனும் பேரின்பமும் பங்குபற்றியிருந்தனர்.. வினோத உடையில் திரு.நவம்,மற்றும் நகுசாந்த்அனுசாந்த்,ரவி ,வாசன், வசந்தா ஆகியோரும் பங்கேற்றனர்.



## எசனில் நாடகத்துறை:

பொதுவாக யேர்மனியல் நாடகத் துறைக்கு பலர் உரமூட்டியபோதும், அத்துறை குறிப்பிடும்படி முன்னேற்றங்காணவில்லை. இருப்பினும் நகைச்சுவை வடிவில் ஆங்காங்கே பலர் நடித்தனர்.

குறிப்பாக லூஸ்மாஸ்டர் புகழ் ஐசக் இன்பராசா அவர்களுடன் இணைந்து திருவாளர்கள் கேதீஸ்வரன்,நவாலியூர் மோகன், ஆகியோர் நகைச்சுவைத் துணுக்குகளை வழங்கினர். தாயக நிகழ்வகளைத்தாங்கி பல நாடகங்கள்,மேடையேறின. தமிழ் பாடசாலை தமிழாலய மாணவர்கள் குறு நாடகங்களை மேடையேற்றியுள்ளனர். புதிய வடிவங்களில் நவீன யுக்திகளை புகுத்தி,நாடகக்கலை வளர வேண்டும்.அதற்கு இளைய சந்ததி முன்வரவேண்டும்.



நவாலியூர் மோகனுடன் அப்புக்குட்டி ராஜகோபால்அவர்களுடன்.ஏபிசி வானொலி விழாவில். (2002) இவ்விழாவை எமது மன்றம் முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 25. Jubiläum des Tamilischen Kultur- und Wohlfahrtsverein

25 Jahre ist es nun her. Eine sehr lange Zeit für die Tamilen in Essen, die ehemals als Flüchtlinge aus Sri Lanka nach Deutschland gekommen sind. Der lang andauernde Bürgerkrieg nimmt kein Ende und die Tamilen in Essen versuchten sich zurechtzufinden, um der nächsten Generation ein gutes Leben zu ermöglichen. Vor 25 Jahren entstand somit der Tamilische Kultur- und Wohlfahrtsverein, um Kindern, Jugendlichen und auch die älteren Menschen unterstützen zu können.....

Vorerst haben wir jemanden zu danken, denn ohne Sie liebevolle Mitbürger der Stadt Essen, der Intergrationsrat und die Regierung, wäre so ein Leben für die Tamilen in Deutschland nicht möglich gewesen und möchten hiermit unseren herzlichen Dank ausdrücken.

"Unsere Kinder sollen viel lernen und ein gutes Leben haben" , waren immer die Wünsche der Eltern. Was sollte man jedoch tun in einem Land, was einem sehr unbekannt ist? Die einzige Antwort: Zusammenhalt, Zusammenarbeit und das: Hand in Hand!

Seither ist der Kulturverein in den Bereichen Musik, Religion, kulturelle Zusammenarbeit mit anderen Kulturvereinen der Stadt Essen etc. sehr engagiert, damit Kinder und Jugendliche sowohl die tamilische Kultur und Tradition kennenlernen als auch andere Kulturen verschiedener Länder vermittelt bekommen.

Es werden Instrumental Kurse, wie Miruthangam (Südindische Trommel), Veena (Südindisches Saiteninstrument), Key Board, Thabla (Nord-indische Trommel), Violinen Unterricht, Gesangsunterricht, Tanzunterricht etc. für Kinder, Jugendliche und auch Musikinteressierte angeboten. Zu dem wird Religionsunterricht angeboten, um den Kindern und Jugendlichen vom Hinduismus zu erzählen und die

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Religion näher zu bringen. Sprachkurse für Mütter und Väter werden auch in Zusammenarbeit mit der Stadt Essen angeboten. Das Thema
Integration und die Zusammenarbeit mit anderen Kulturvereinen aus verschiedenen Ländern ist für den Tamilischen Kultur- und Wohlfahrtsverein
ein sehr wichtiger Bestandteil und der Verein nimmt die Arbeit auch sehr ernst.

Es nehmen sehr viele Kinder und Jugendliche an den angebotenen Kursen teil und haben Spaß zu musizieren, Aktivitäten nachzugehen und vor allem zusammen zu sein und zu lernen.

Der Tamilische Kultur- und Wohlfahrtsverein arbeitet sehr eng mit der Stadt Essen zusammen und nimmt gerne an den Veranstaltungen, Kulturfesten
und Konzerten teil und trägt ihren Teil dazu bei mit Tänzen (Klassik, Bollywood etc.) , indischer Musik, Theaterstücken etc.

Am 16. Oktober feiert der Tamilische Kultur- und Wohlfahrtsverein ihr 25 jähriges Bestehen im Kulturhauptstadtjahr im Jugendzentrum Essen: Papestr.1,
45145 Essen und lädt alle zu dieser Veranstaltung ein. Viele interessante Darbietungen wie indische Tänze, Theateraufführungen, Musikdarbietungen und Vieles mehr.

Der Eintritt ist Frei und jeder ist herzlich willkommen!









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Sangeetha Bushanam S.Selvaseeralan
சங்கீதபூசணம்.செ.செல்வசீராளன்

MASURAN WEG 1 , BONN, GERMANY
மசூரன் வெக் 1 பொண்,ஜேர்மனி

எசனில் 2010 ஆண்டு ஜப்பசி 16ல் நடைபெறவிருக்கும் **தமிழர் கலாச்சார நற் பணி மன்ற இருபத்தைந்தாவது நிறைவு விழா** வெற்றி விழாவாக, புத்துணர்வு விழாவாக,எழுச்சி விழாவாக, ஒற்றுமை விழாவாக, அமையவேண்டி **என் உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்.** ஒவ்வொரு கலை மாணவர்களும் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அவையோரை ஆனந்தத்தில் திளைத்திட வைப்பர்.

இந்த விழாவிற்கு காரணமாக விளங்குபவாகள் **திரு. நயினை விஜயனும் அவர் மனைவியும். தமிழர் கலாச்சார நற்பணி மன் றத்தினை** எத்தனையோ தடைகளையும் தாண்டி சோர்வடையாது இயக்கி வருகின்றனர். 15வருடங்களுக்கு மேல் திரு. நயினை விஜயனை நன்கறிவேன். தமிழுக்காய்,கலைக்காய், தமிழருக்காய் தொண்டுகள் பல அயராது ஆற்றியவர். நயம்படப் பேசி கலைஞர்களை உற்சாகப்படுத்துவதும் கௌரவிப்பதும்அவருக்கே உரித்தான தனிக்கலை. அது பற்றி விரித்துரைப்பின் பல பக்கங்கள் தேவை. அவர்களது நற் பணிகள் என்றென்றும் தொடர என் அன்பான வாழ்த்துக்கள்.

தமிழர் கலாச்சார நற்பணி மன்றத்தில் பயின்ற மாணவர்கள் **பாட்டிசை, மீட்டிசை, நரம்பிசை, முழக்கிசை** ஆகிய கலைகளில் இறுதித் தேர்வில் திறமையுடன் தேர்வாகி பட்டங்கள் பெற்றுள்ளனர். பலர் அரங் கேற்றமும் செய்துள்ளனர். இன்னும் பலர் அரங்கேற்றம் செய்யும் நிலையிலும் உள்ளனர்.

**இந்த விழாவில் முத்தமிழின் இசை, இயல், நாடகம் இங்கே தேனாறாக இனிக்கட்டும்.காலத்தின் விளைவுகளை மனதில் சுமப்போருக்கு ஒரு சுவையான சுமைதாங்கி ஆகட்டும். மழலை பேசும் சின்னஞ் சிறு சிறார்கள் சோர்வின்மை பெறுவார்கள். இளம் உள்ளங்கள் மறுமலர்ச்சி பெறட்டும், மற்றவர் மகிழ்சியை நாடட்டும். நீரின்றி நிலமேது?, நிலமின்றி வாழ் வேது? அதுபோன்று மகிழ்வின்றி மனத்தெளிவு ஏது? புத்துணர்வின்றி மனவுறுதிதான் ஏது? அயராது தாயகம் காக்க இடர்கள் நேரிடினும் தமிழ் கலைகள் தரணியில் அழியாது புகழ் கொண்டு வாழ நாம் பாடுபடத்தடையேது? ஓன்றிடுவோம் தமிழ்தான் எங்கள் வழி. தமிழ்க் கலைதான் எங்கள் ஒளி. நிச்சயம் தளிர்த்திடுவோம்.**

**எல்லோரின் அன்பையும் நாடிடும் அன்பன்**

*செ.செல்வச்சீராளன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதம் - வீணை வகுப்பு :

***கற்றுக்கொண்டிருப்பவர்கள் :***



ஜெனனி சிவதாஸ்
சஜினி விஜயன்
சுஜீத்தா பாலகுமாரன்.
கார்த்திகா சிவபாலன்
சுஜீனா தவலிங்கம்
திவாகர் சிவநேசன்
பிரவீணா தயாநிதி
சுயானி லிங்கேஸ்வரன்

திருமதி.ஜெனனி சிவதாஸ், செல்வி சுஜினா தவலிங்கம் ஆகியோர் வீணையிலும், செல்வன் திவாகர் சிவநேசன் வாய்ப்பாட்டிலும் டிப்ளோமா பட்டம் (**ofaal London.2010**)பெற்றுக்கொண்டார்கள்.

## பழைய மாணவர்கள்:

சோபிகா சரவணபவானந்தன்
கிரிஷாந்த் குணபாலசிங்கம்
பானுஷா திருநாவுக்கரசு
பார்கவி,சாம்பவி சபாநாத சர்மா
சோபனா,வர்ணா,சரவணன் தவலிங்கம்.
சுஜீவன் பாலேந்திரா
ரஜீவன் திருநாவுக்கரசு
சனூஜா துரைச்சாமி
சரண்ஜா தங்கரத்தினம்
நிருபா,கஜானி சாந்தகுமார்
சுகன்ஜா தயாநிதி,அபிஷன்,சுதுஷன் சாயகி சிவஅருள்.
சுஜாந்தினி மகேந்திரன், ஜெயதர்சினி ஜெயபாலா
கரோலினி,தர்மிளா அந்தோனிப்பிள்ளை
ஜெனூகா தர்மலிங்கம், தாரணி தட்ஷணாமூர்த்தி, கரிபிரஷாத்,சாலிபிரசாத்
சிறிதரன். தனஞ்செயன் சூரி,
தர்ஷிகா தர்மசோதிராஜன், பபிதா,கிறிஸ்டா பாலகுமாரன்
சர்வேஸ்வரன்,சாரங்கன்,சானுஜா உதயகுமார்.
சானுஜா சிறிகரன்,மெலானி, ரகுநாத்,ராகவி இராஜசூரியர்.
டெபோறா ஜெயபாலன்.

முன்னாள் வீணை,சங்கீத ஆசிரியை: ஜெயராணி சகாதேவன் அவர்கள். மன்றத்தால் ஆரம்பித்த வீணை சங்கீத ஆரம்பவகுப்புகளில் (2000) சிறப்பாக மாணவர்களைப் பயிற்றுவித்தவர்.





**சங்கீத ஆசிரியை செல்வலக்ஷ்மி சண்முகரட்ணம் அவர்களும் விஷேட பயிற்சி வகுப்புகளையும் சிறப்பாக நடாத்தியிருந்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசன் தமிழாலயம் வாழ்த்துகிறது !

புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்காலச் சந்ததிகளின் நன்மைகருதி ,மொழி கலை, கலாச்சார விழுமியங்களை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் பலர் பல முயற்சிகளை எடுத்து வந்துள்ளனர்.அந்த வகையில் எசன் மாநகரில் முதன் முதலாகச் சிந்தித்து அத்தகைய செயற்பாடுகளில் எசன் தமிழர் கலாச்சார நற் பணிமன்றம் 25 ஆண்டுகளாக பல அரிய சேவைகளை ஆற்றியுள்ளது யாவரும் அறிந்ததொன்று.

ஈழத்தமிழ்மக்களின் இன்றைய காலச்சூழலில் தாயகத்திலும் புலத்திலும் கலை,மொழி பண்பாடு போன்ற கட்டுக் கோப்புகளை பேணிப்பாதுகாத்து தமிழரின் இன அடையாளங்கள் சிதைந்து போகாவண்ணம் காப்பது வரலாற்றுக் கடைமையாகிறது.அந்தவகையில்,

எசனில் வாழும் அனைத்து தமிழ்மக்களையும் ஒற்றுமையென்ற ஒருகுடைக்கீழ் இணைத்து எதிர்காலச்சந்ததிகளின் நலன் கருதி கல்வி , கலை ,தாய்மொழி போன்ற வளர்ச்சிப்பணிகளில் உதவி வருகின்ற தமிழர்கலாச்சார நற்பணிமன்றம் வெள்ளிவிழாக்காணும் இவ்வேளையில் தமிழாலய மாணவர்கள்,பெற்றோர்கள், ஆசிரியர்கள், செயற்பாட்டாளர்கள் அனைவருடனும் இணைந்து, மன்றத்தின் பணிதொடர வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ச.தர்மசோதிராசன்.
நிர்வாகி, தமிழாலயம் எசன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1985 ம் ஆண்டு எசனில் நடைபெற்ற முதலாவது கலைநிகழ்வில் எடுத்த படம்.விழாவுக்கு வருகைதந்தோரும் காணப்படுகின்றனர்.திருமதி.சுவான்சர், திரு.டெயக்ஸ் ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர்.

1999ல் நடைபெற்ற வாணிவிழாவில் எசன் மாநகரசபை முதல்வர் கௌரவிக்கப்பட்டபோது...





ஐநாவுக்குள் நுழைந்து (1974)தமிழர்களின் இனப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உலக அரசுத்தலைவர்கள் முன்னிலையில் எடுத்துக் கூறியவர் திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்கள். இவர் 1996ம் ஆண்டு நடைபெற்ற தமிழருவி இசைத்திருவிழாவில் பிரதமவிருந்தினராக வருகைதந்தபோது தமிழருவிப் பத்திரிகையுடன்.......



1986ம் ஆண்டு நடைபெற்ற ஒரு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் எடுத்த படம்.அந்த நாள் ஞாபகம்......



1986ல் இடம்பெற்ற முதலாவது கலைவிழாவில் சேகர், மதி ஆகியோர்,விக்ரோறியாப் பார்க் என்ற நாடகத்தில் தோன்றியபோது....
பலரினதும் பாராட்டைப்பெற்றுக்கொண்ட நகைச்சுவை நாடகம். உணர்வுகள் உறங்குவதில்லை என்ற பிறிதொருநாடகத்தில்,விஜயன், ஆனந்தன்,ஜெயரட்ணம், சின்னத்துரை,பாலா,ராஜதாசன், சோதி இன்னும் பலரும் இடம்பெற்றிருந்தனர்.பெருந்திரளாகக் யேர்மானியர்கள் பார்வையாளராகக் கலந்துகொண்ட இவ்விழாவிற்குப்பின்னரான காலப்பகுதியில் இலங்கைத் தமிழரின் இன்னல்கள்குறித்து தெரிந்துகொண்டனர்.



1989ம் ஆண்டு நடைபெற்ற மனோரமாலை நிகழ்வில்...... தமிழக திரைப்பட நகைச்சுவை நடிகை மனோரம்மா குழுவினர் டியூஸ்பேர்க் நகருக்கு ஒரு நிகழ்ச்சிக்காக வருகைதந்தபோது எடுத்தபடம். தாயக நிலைமைகளை நாடுகளெங்கும் எடுத்துச்சென்ற கலைத்தூதுவர்களாக அவர்கள் மிளிர்ந்த காலம்.



உலகத்தமிழ்ப்பண்பாட்டியக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் 25ஆண்டுகள் தலைவராக அரும்பணியாற்றியவருமான அமரர் போராசிரியர்-இர.ந.வீரப்பன். அவர்கள்...1993ல் நடைபெற்ற தமிழருவியின் முதலாவது ஆண்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்தபோது.ஈழத்தமிழர்களுக்கு தமிழீழமே தீர்வு என்று நாடுகளெங்கும் கூறிவந்தவர்.இவர் மலேசிய நாட்டைச்சேர்ந்தவர், 42 நாடுகளுக்குச்சென்று தமிழரின் நிலைகுறித்து உலகத்தமிழர்(1,2,3) என்ற நூலை ஆக்கியவர்.அவரெழுதிய தென்னாபிரிக்காவில் 77 நாட்கள் என்ற கட்டுரை தொடராக தமிழருவியில் பிரசுரமானது-தமிழ்மணிக்குப் பாட நூலாகியது.. தமிழருவி ஆசிரியருடன்.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *வாழ்க வளர்க என மனதார வாழ்த்துகிறேன்!*



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்!

என்ற பாரதியின் கனவை நனவாக்கிக்கொண்டிருப்பவர்கள் ஈழத்தமிழர்கள்.அவ்வகையில் எசனில் திரு.நயினை விஜயன் அவர்கள் தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தை உருவாக்கி அதன் பிரதம நிர்வாகியாகவும் இருந்து மன்றம் நலிவுறா வண்ணம் காத்து வெள்ளிவிழாக்காணும் பெருமை அவருக்கே உரியது.ஒரு இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறதென்றால் அவ்வினத்தின் மொழியும் பண்பாடுகளும் கலை கலாச்சாரங்களும் வளர்ந்துகொண்டே இருத்தல் வேண்டும்.என்பதற்கமைய யேர்மனியில் தமிழ்மொழிவளரத் தமிழ்த் தொண்டாற்றி வெள்ளி விழாக்காணும்,தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் போற்றுதற்குரியது.

இம்மன்றம்,தமிழினூடாகக் கலைவகுப்புகளையும் சமய ஆசாரங்களிலிருந்து இளம் தலைமுறையினர் வழுவாதிருக்க சைவநெறிப்பாடசாலையையும்,நிர்வகித்து வருவது அனைவரும் அறிந்ததொன்று.

உன்னுடைய முகத்தை உன் உழைப்பால் உருவாக்கு உனக்கென்றோர் முகவரியை உயிர்கொடுத்தும் உருவாக்கு !

யேர்மனியில் வெளிவந்த முதல் தமிழ்ச்செய்தித்தாள் என்றகின்ற பெருமை தமிழருவிககே உண்டு.தமிழருவியின் ஒவ்வொரு ஆண்டுவிழாக்களிலும் ஐரோப்பாதழுவிய ரீதியில் இசைக்குழுக்களிடையில் இசைப்போட்டியினை நடாத்தி,பாடகர்களையும் வாத்தியக் கலைஞர்களையும் முதன்முதலாகக் மதிப்பளித்த பெருமை தமிழருவிப் பத்திரிகைக்கும் அதன் ஆசிரியரான நயினை விஜயன் குடும்பத்தினருக்கே உரியது.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு

எனும் வள்ளுவனார் வாக்குக்கு இணங்க வாழ்த்துவதும் பாராட்டுவதும் சாலவும் சிறந்தது.

நாற்புறமும் கடலாட
நடுவினிலே இயற்கையாட
மேற்புறம் மேகம்கூட
மெல்லியற் காற்றும் பாட
நயினையம் பதியினில் பிறந்து
நற்சேவையாற்றும்
நயினை விஜயனும் நற்பணி மன்றமும்
இன்னும் பல பணிகளாற்றிட
வாழ்க வளர்க என வாழ்த்துகின்றேன்.

அவைத்திலகம்
ஆர்..பாலா எசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம்**
**எசன் தமிழ்ப் பாடசாலை**

Tamilischer Sprachdienst und Kulturverein e.V.
Essener Tamilische Schule
Sevenarstr 1-3
45141 Essen
E-Mail:- tamilschoolessen@yahoo.de
Internet:- tamilschool-essen.blogspot.com

Essen, 30. September 2010

மனதோடு..... மனதார....வாழ்த்துகின்றோம்!...

ஜேர்மனியில் எசன் நகரில் வாழ்ந்துவரும் திரு.நயினை விஜயன் அவர்களால் நடாத்தப்படும் தமிழர் கலாசார நற்பணி மன்றம் தனது 25வது ஆண்டு நிறைவைக் காண்பது அற்புத சாதனைதான். சந்தேகமே வேண்டாம். வாழ்த்துகின்றோம். மனதார வாழ்த்துகின்றோம்.

ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டு தம் சொந்த மண்ணை, கலை, கலாசார விழுமியங்களை மறவாது நினைத்து வாழ்ந்து வருவது இயற்கைதான். அந்த வகையில் எம்மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே தமிழர் கலாசார நற்பணி மன்றம். இதை ஆரம்பிக்க மூலகாரணமாக இருந்தவர்களான திரு.நயினை விஜயன் அவர்களையும் அவரின் குடும்பத்தாரையும் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம். இவர்களுடைய துணிவு, ஆளுமை, ஆற்றல், அறிவு, நிர்வாகத்திறன், எசன் தமிழ்மக்களின் ஆதரவு போன்றவற்றாலே இம்மன்றம் 25 வருடங்களாக வளர்பிறை போல வளர்ந்து நிற்கின்றது.

ஆஹா! எப்படிப்பட்ட சாதனை! எம் தமிழ்ச்சிறார்களின் நலன் கருதி அவர்களுக்கு கலை, கலாசார விழுமியங்களை புகட்டி அவர்களை நல்லதொரு தமிழ்ச்சமுதாயமாக படைப்பதற்கு வழிசமைத்துள்ளார்கள்.

ஒற்றுமையாக எம் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி தாய்மொழி, கலை, சமய, கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்து வரும் தமிழர் கலாசார நற்பணி மன்றத்தின் சேவையைப் பாராட்டி, வெள்ளிவிழா இனிதே நடைபெற வாழ்த்தி நிற்கின்றோம்.

தமிழர்கள் நாம் தமிழால் ஒன்றுபடுவோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

வளர்க தமிழர் கலாசார நற்பணி மன்றத்தின் சேவை!

**"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தான் செயின்"**

எசன் தமிழ்ப்பாடசாலை நிர்வாகத்தினர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயலின் கற்றுவரும் மாணவர்களுடன் ஆசிரியை.
செல்வன் கார்த்திகேயன் ரமணகுமார்,ரகுநாத் இராமநாதன்,செல்விகள்.கோபிகா கலியுகவரதன், சஜினி விஜயன்,ரகுவன்யா இராமநாதன்,சாம்பவி சுபசபாநாத சர்மா,விதுசா சிறிரங்கன்,சுயானி லிங்கேஸ்வரன்,சகவாணி பாஸ்கரன், ரஜிவன் திருநாவுக்கரசு.

*எங்கள் வயலின் ஆசிரியை பற்றி....*

*செல்வி சோபிகா சிவராசா அவர்கள் யேர்மன் முறையில் 10 ஆண்டுகள் சிறுவயதுமுதலே வயலினைக்கற்றுப் பின்னர் ஆசிரியை திருமதி.பாலஜோதி அமிர்தலிங்கம் அவர்களிடமும் கற்றார்.பின்னர் இணுவையூர் இசைஞானதிலகம் வயலின் வித்துவான் திரு.இராதாகிருஷ்ணன் அவர்களிடமும் பயின்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றங் கண்டவர்.இளங் கலைஞரான இவர் பல கலை நிகழ்ச்சிகளுக்குப் பக்கவாத்தியம் வாசித்து வருவதுடன் கற்பித்தும் வருகிறார்.*

*எமது பாடசாலையில் 2003 ல் ஆரம்பித்த வயலின் கற்கைநெறியில் திருமதி.ரஞ்சிதமலர் பரமானந்தன் அவர்கள் ஆரம்ப ஆசிரியையாக கடமையாற்றினார். தொடர்ந்து வயலின் ஆரிரியர் உமாகாந்தன் அவர்களும் அவரைத்தொடர்ந்து செல்வி சோபிகா சிவராஜா கடமையாற்றிவருகிறார்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலின் வகுப்பு பழைய மாணவர்கள்.

| | |
|---|---|
| தர்சனா தர்மபாலன் | லக்சனா தர்மபாலன் |
| அனுசாந்த் விஜயன் | ராகவி,புராதனி,ராகினி ஜெகநீதன் |
| சோபிகா,சுதர்கினி, | துசாலினி சரவணபவானந்தன் |
| அனுஜா நவரட்ணம் | அபிலாசா தர்மசோதிராசன் |
| ஜெனனி ஜெயபாலன் | ஜெயனி ரடணமகேசன் |
| கம்சிகா ஜெயரட்ணம் | பிரவிணா தயாநிதி |
| ராகவீணா யோகேஸ்வரன் | திவ்ஜா,நிர்சா மகேந்திரன் |
| வர்த்தினி சுபோசினி பாலமுரளி | வர்ணா தவலிங்கம் |
| டெபோறா ஜெயபாலன் | |







வயலின் பயிற்சியின்போது .......



வாணி விழா நிகழ்வில் நிர்ஷா,திவ்யா மகேந்திரன்,ராகவி புராதனி ஜெகன்,
வீணை: ஜெனனி,விஜயன்,சரண்ஜா தங்கரட்ணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**நிகழ்வுகளின் நிழல்கள்**

*கேர்ண கஸ்தூரி சலங்கையொலி நர்த் தனாலய அதிபர் திருமதி.சாவித்திரி இம்மானுவல் அவர்களின் மாணவ மாணவிகள் எமது மன்ற நிகழ்வுகளில் நடன நிகழ்வுகளை வழங்கியிருந்தனர். அவருக்கும் இந்தவேளையில் நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின் றோம்.*

நகைச்சுவைத் திலகம் லூஸ்மாஸ்டர் புகழ் ஐசக் இன்பராஜா அவர்களும், நடிப்புச்சுடர் நவாலியூர் மோகன் அவர் களும் இணைந்து பல நாடகங்களை எமது விழாக்களில் தாயகச் சிந்தனையோடு மேடையேற்றிச் சிறப்பித்தனர்......!

1993ல் தமிழருவிக்கு திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் தந்த பேட் டியின் போது ......!






தமிழரின் கலைகலாச்சார விழுமியங் களை அறிய விரும்பிய யேர்மன் பல்கலைக்கழக மாணவர் களை தாயகத்துக்கு அழைத்துச் செல்ல முடியாத சூழலில் எமது செலவில் 1998ல் தமிழகம் அழைத் துச்சென்றபோது......எடுத்த படம். தமிழர் குறித்து பல கட்டுரைகளை எழுதினர்.

புதுச்சேரி ஓவியர் ஜெயப்பிரகாஷ் அவர்கள். எசனில் நாம் நடத்திய ஓவியக்கண்காட்சியில்........

பேர்லினில் நடைபெற்ற பன்னாட்டுத் தமிழுறவு மன்ற மாநாட்டுக்கு வருகைதந்த முத்தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களோடு....






சுனாமி உதவிக்காக மன்றக் கலைஞர்கள் இசலோனில்..கலை நிகழ்வில்.............!




வானொலி அறிவிப்பாளர் திரு.எஸ்.கே.ராஜனுக்கு சர்வதேச புலமையாளர் எழுத்தாளர்கள் சார்பில் மதிப்பளித்தபோது.....








எசன் நகரசபை நடாத்திய வெளிநாட்டவர் ஆலோசனைச் சபைத்தேர் தலில் போட்டியிட்டபோது வாக்களித்த எசன் வாழ் தமிழுறவுகளுக்கு எமது நன்றிகள்!.

நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை உருவாக் குகிறது.-- ஸ்ரீ அன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசன் இளங்குயில்கள் இசைக்குழு.



இவர்களால் முடியும் என இளைஞர்களை இணைத்து,எம்மால் உருவாக்கப்பட்ட எசன் இளங்குயில்கள் இசைக்குழு இன்று முன்னணியில் திகழ்வதற்கு இக்குழுவில் அங்கம்வகிக்கும் கலைஞர்களின் ஒத்துழைப்பும்,தம்மை மென்மேலும் இசைத்துறையில் பயிற்சிகளில் ஈடுபடுத்திக்கொளவதுமாகும்.புத்தம் புதிய பாடல்களை சுருதிசுத்தமாக பாடுவதில் இக்குழுவின் பாடகர்கள் பாடகிகள் கைதேர்ந்தவர்கள்.பழைய பாடல்களை ரசிக்கும் தேடல்களிலும் ஈடுபடுகின்றனர்.



ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும் செல்லும் வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள்.
தமிழ் இசையூடாகவும் வளர்ந்துவருவதை நாம் காண்கிறோம்.மிருதங்கம்,தபேலா மற்றும் கீபோர்ட் ஆகிய வாத்தியங்களை வாசிக்கும் கலைஞர்கள் முறைப்படி கற்றுக்கொண்டதனால் லாவகமாக இசையை மீட்பதில் சிறந்தவர்களாக இருக்கின்றார்கள்.



ஆறு ஆண்டுகளைக் கடந்து இசைப்பணியாற்றும் இக்கலைஞர்கள் தமிழிசைப்பாடல்களுக்கும் இசையமைத்துவருகின்றார்கள்.
திரு.ரகுராம்,ராஜீவன்,நிரோசன் திருநாவுக்கரசு, மூவரும் சகோதரர்களாவர்.இவர்களோடு நகுஷாந், அனுஷாந்த் நயினை விஜயன் ஆகியோர் மிருதங்கக் கலையை முறைப்படிகற்று அரங்கேற்றங்கண்டவர்கள்.டிப்ளோமா பட்டம்பெற்றவர்கள்.பாடகிகள் ஜெனனி ஜெயபாலன்,தீபிகா,திவாகர் சிவநேசன், போன்றோரும் வயலின்,வாய்ப்பாட்டுப் போன்றவற்றில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள்.
மற்றும் பிரவிணா தயாநிதி,சஜினி விஜயன், பிரபாகினி,சுஜீத்தா பவித்ரா ரகுராம்,ஆரபி சுரேஷ்குமார்,வர்ணன் சுரேஷ்குமார் (இவர் மிருதங்கம், மோட்சிங்கலைஞராவார்.) சிந்து ஆகியோரும், நன்றாகப் பாடவும் வாத்தியங்களை இசைக்கவும் வல்லவர்களாகத் திகழ்கிறார்கள்.எசன் நகருக்குப் பெருமையையும், தமிழர்களுக்கு சிறப்பையும்இந்த இளங்குயில்கள் பெற்றுத்தருவது பாராட்டுக் குரியது..இவர்களைஅழைத்துஆதரிப்பவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறார்கள்.







இந்த இசைக்குழுவில் இணைந்து பாடவிரும்பும் பாடகர்கள் பாடகிகள் ஆவலோடு வரவேற்கப படுகிறார்கள். இசையால் வசமாகாத இதயமெது?

- மணிபல்லவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Essen Haarzopfல் தமிழர்-1985லிருந்து.

ஆக்கம்:தி.ஜெகநீதன் எசன்.

1985ன் ஆரம்பகாலங்களில் எசன் நகரில் தமிழர்கள் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம்.

எசன் நகரில் 6 முகாம்கள் இருந்தன.

**Haarzopf, Borbeck,**

**Haisingen,**

**Fran-kenstr,Steele,Alterbotropper str,**

மேற்கண்ட முகாம்களில்

ஏனைய நாட்டு மக்களுடன் குடியமர்த்தப்பட்டனர். காட்சொப் முகாமில் 4 குடும்பத்தவர்கள் உட்பட 120 இளைஞர்களும் இருந்தனர்.ஆரம்பகாலத்தில் கரித்தாஸ்,டியாக்கோனி,தேவாலயம் ஆகியவற்றிலிருந்து வந்தஉத்தியோகத்தர்கள்,

சமூகசேவகர்கள் எங்களுக்கு உதவிகள் செய்தார்கள்.

திருமதி.எவேர்ட் என்ற அம்மையார் பல உதவிகளைச்

செய்தார்.டொச் மொழி படிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.எங்கள் நலன்களைக் கவனிப்பதற்காக யேர்மன் தமிழ் நட்புறவுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

கரித்தாஸ்,டியாக்கோனி,எஸ்: பி.டி.உறுப்பினர்களுடன் இணைந்து நன்றாகச் செயற்பட்டது.மாதம் ஒருதடவை கூடிஆலோசிக்கப்பட்டது. கழகத்தில் தமிழர்களின்

சார்பில்,திருவாளர்கள் அருள்நேசன்,

தி..ஜெகநீதன்,பாலா,

வே.இராமகிருஸ்ணன்,

அல்பிரட்,ராஜா,

பாபு, ரவி,ஆகியோர்



இணைக்கப்பட்டார்

கள்.எசன் நகரத்துக்கு வந்த தமிழர்கள் பலருக்கு திருமதி.எவேர்ட் அவர்களின் உதவி கிட்டியது.

1986 ம்ஆண்டுக்குள் கூடுதலாக

தனி வீடு எடுத்து நகரத்தின் பல பகுதிகளிலும் நன்றாக வாழ்கிறார்கள்..1985-1991 வரை காட்ஸ்சொப் நகரில் மாலை 4.மணி தொடக்கம் 10 மணிவரை

சுந்தித்து கூடி மகிழ்வார்கள்.

இப்பொழுது அந்த நடைமுறை இல்லாது போய்விட்டது.நாம் தமிழர்கள் மீண்டும் ஒற்றுமையாக ஒன்றுகூடி

எமது தாயகத்தில் வாழும் மக்களுக்கும்,இங்கு வாழும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் நன்மை கிடைக்கக்கூடிய விதத்தில் புது வேகத்துடன் செயல்பட 25 வது ஆண்டு விழாவில் ஒன்றுசேர்ந்து,செயல்படுவோம் என உறுதி

கொள்வோம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

**Each for other,other for each“**

**நன்றி**

**தி.ஜெகநீதன்**

1985-86















*தாயகத்தை காதல் செய்*

*தரணியில் தலை*

*நிமிர்வாய்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் சிவமயம்

# தமிழரை தமிழராக தரணி எங்கும் தவழ வைக்கும் எசன் தமிழர் கலாச்சார நற்பணிமன்றமே வாழி வாழி......

யேர்மன் திருநாட்டில் வடபால் அமைந்துள்ள எசன் மாநகரில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மகத்தான பணியுடன் மிளிர்ந்திருக்கும் தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தை பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப் பட்டுள்ளேன். நூற்றுக்கணக்கான இளையோர்களை தமிழிலும், கலையிலும், ஆன்மீகத்திலும் இணைக்கும்வகையில், 1985ம் ஆண்டு தொடக்கம் 2010வரை ஏற்பட்ட பல இன்னல்களையும், இடையூறுகளையும் தாண்டி இன்று பெரும் ஆலவிருட்சமாக வானோங்க வளர்ந்திருப்பதை கண்கூடாக காண்கின்றோம். இறைவனின் திருவருளினாலும், நல் பெரியோர்களின் ஆசியினாலும், அன்புச் சகோதரர் மதிப்புக்குரிய நயினை விஜயன் அவர்களின் பகீரத பெருமுயற்ச்சியினாலும் இன்று 25ம் ஆண்டு வெள்ளிவிழாவை கொண்டாடுகின்றது தமிழர் கலாச்சார நற்பணிமன்றம்.

அதிஉயிர் பதவியாம் மானிடப்பிறவியை பெற்றயாம் தொட்ட வினை தொடரும். வினை அறுப்பதற்கு ஒரே ஒரு வழி உண்டு என்பதை நன்கு அறிவோம். அப்பேற்பட்ட நிலையில் உள்ள ஆன்மாக்களாகிய நாம் செய்வது யாதென அறியாமல் திண்டாடும் வேளையில் எம் பாலுள்ள பகுத்தறிவைக் கொண்டு நம்மை நற்சிந்தனையாளர்களாகவும், நற்பண்பாளர்களாகவும், நற்செயலாளர்களாகவும் ஆக்கிக்கொள்ள இப்படியான சமூகத்தை முன்நிலைக்கு கொண்டுவரும் செயற்பாடுகளில் எம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும். அந்த வகையில் திரு விஜயன் குடும்பமே இன்று ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளனர்.

1992ம் ஆண்டு தொடக்கம் தமிழருவி என்ற பத்திரிகையையும் நடாத்தி, ஏழு வருடங்களாக மதியம் 1மணி தொடக்கம் மறுநாள் வரையும் பல இசைக்குழுக்களை ஒரே மேடையில் ஏற்றி அவர்களை ஊக்குவிக்குமுகமாக பல பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கி அத்துடன் நின்றுவிடாமல் நடனம், வயலின், சுரத்தட்டு, மிருதங்கம் போன்ற கலை வகுப்புக்களையும் நடாத்தி, ஆன்மாவுடன் லயிக்கும் வகையில் சமையநெறிவகுப்புக்களையும் நடாத்தி வருவதோடு, இன்று வரை எட்டு மாணவர்களையும் அரங்கேற்றம் காணவைத்துள்ளனர்.

இவர்களுடைய அரிய பணியை எவராலும் பாராட்டாமல் இருக்கமுடியாது. அந்த வகையில், இந்தப் பணிக்கு திரு விஜயன் குடும்பத்தினருடன் பக்க துணையாக எசன் நகரசபையினரும் ஒத்துழைப்பை வளங்கி எமது சமூகத்தினருக்கு பெரும் உதவிக்கரம் நீட்டியுள்ளனர். தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தினராலும், தாயக அமைப்பினராலும் நடாத்தப் பட்ட கலைவிழாக்கள், பொதுக்கூட்டங்கள், ஒன்றுகூடல்கள் போன்ற பல நிகழ்வுகளுக்கு மண்டப ஒழுங்குகளும், மற்றும் இதர உதவிகளையும் எசன் தமழர் கலாச்சார நற்பணி மன்றமே ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர். ஆகவே இப்படியான பெரும் சமூகப் பணியை செய்துவரும் திரு விஜயன் குடும்பத்தினரையும், ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவர் சார்ந்த நற்பணிமன்றத்தினரையும் மனதார வாழ்த்துவதோடு, 25ம் ஆண்டு வெள்ளிவிழா சிறப்புடன் நடைபெற வாழ்த்திடுகின்றேன். இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு நிறைவான வாழ்த்துக்கள் வழங்குவதுடன் இந்த அரியபணி சிறக்க கற்றிங்கன் விநாயகர் அருளும், எசன் முருகன் அருளும் தங்கு தடையின்றி கிடைக்க நான் இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்

**கந்தையா சிவகுமார் (சிவம்)**


**நிர்வாகி, ஆசிரியர் (கற்றிங்கன் தமிழாலயம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamilischer Kultur- und Wohlfahrtsverein Essen e.V.

---

## Seit 25 Jahren – Ein Verein mit Geschichte…



Unser Verein feiert nun mit Ihnen zusammen das Bestehen – 25 Jahre Tamilischer Kultur- und Wohlfahrtsverein Essen e.V. in Essen!

In diesem Zusammenhang möchten wir Ihnen Informationen über Entstehung, Erfolge, Zusammenarbeit mit anderen Vereinen berichten.
Seit 1985 - gegründet von Herrn Masilamany Wijayakulasingam (Vorsitzender des Vereins) und weiteren Personen – arbeitete der Verein grundsätzlich für Integration, Kultur und Sport!

Wir haben seit 1985 mit Zusammenarbeit der Stadt Essen, Ausländerbehörde, RAA – interkulturelles Büro und später mit dem Ausländerbeirat und dem Verbund der Immigrantenvereine vieles erreicht und geschaffen.

## Hierfür bedanken wir uns ganz herzlich bei allen Beteiligten.

Mit viel Einsatz haben wir zahlreiche Sportfeste, Kinder- und Jugendfeste, Kulturfeste und sogar eine Zeitung namens „Thamilaruvi“ herausgebracht.

Der Verein setzte sich ein für Tamilen, die Schwierigkeiten mit ihrem Aufenthalt hatten oder Schwierigkeiten mit der deutschen Sprache hatten. Damals war es sehr schwierig, denn man musste vielen Personen gleichzeitig helfen, doch der Verein hat niemals aufgegeben und viel Kraft weitergemacht.
Die erste Tamilische – Sprachschule, die erste Fußballmannschaft, die erste Volleyballmannschaft wurde unter unserem Verein gegründet, somit konnten wir hier in Essen unsere Kultur und Sprache vorantreiben und unseren Kindern und Jugendlichen helfen unsere Muttersprache zu erlernen.

Die erste Tamilische Tageszeitung „Thamilaruvi“ hatte viel Erfolg unter den tamilischen Mitbürgern, so konnten sie über Jahre hinweg die Geschehnisse in Sri Lanka, in Deutschland, in Europa hautnah mitverfolgen.
Mit unter wurde unter dem Namen Kulturfeste veranstaltet, wo über 3000 Menschen anwesend waren. Bei diesen Kulturfesten wurden viele Prominente Menschen



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

eingeladen, wie der Polizeipräsident, der Oberbürgermeister, Bedienstete vom RAA - Büro und auch viele Prominente aus Indien und Sri Lanka!

Im Laufe der Zeit hat der Verein viele Räumlichkeiten gesucht, wo sich viele Tamilen auch untereinander viele Themen austauschen konnten. Darum haben wir das JZE Jugendzentrum Essen an der Papestraße zunächst ausgesucht und konnten mit Hilfe von Herrn Voß dort viele Kurse für Kinder und Jugendliche, aber auch für die Senioren durchführen. Wir haben dort Tanzkurse, Trommelkurse und Sprachkurse angeboten.

Nach ein paar Jahren wurden die Räumlichkeiten gewechselt in die Räume von Jugendamt Team 1, Pinguin.
Dort half uns Frau Sonja Warwel bei allen Belangen in Bezug auf Räumlichkeiten.
Mit zahlreichen Veranstaltungen hat sich unser Verein im Raum Essen einen Namen gemacht. Wie z.B. Essen ORIGINAL, Karneval Essen, Stadtaufführungen, Theatervorführungen, Musikveranstaltungen.

Nun freuen wir uns gemeinsam auf diesen Tag und sind frohen Mutes weitere viele Jahre mit Ihnen allen zusammen noch viel mehr zu erreichen.

Wir freuen uns sehr mit Ihnen zusammen dieses Jubiläum zu feiern.

Vielen Dank!

Nagu Wijayan



அண்மையில் மிருதங்க அரங்கேற்றம் கண்ட செல்வன் இராகுலன் இராமநாதனுடன் குரு அனுஷாந்த் நயினை விஜயனுடன் மிருதங்க வித்துவான் நகுஷாந்த் விஜயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamilischer Kultur - und Wohlfahrtsverein Essen e.V.




Raguram Thirunavukarasu
Architectural Draftman
Qualifizierter Musiker
(Qualified Musician)
Der Folkwang Musikschule
-Keyboard-



**Musik Biographie**

| | |
|---|---|
| Vom 01/1990 - 01/2000 | Schüler der Folkwangs Musikschule |
| Seit 01/2000 | Qualifizierter Musiker (Keyboard/Synthesizer) der Folkwangs Musikschule |
| Seit 01/2004 | Musikband Mitglied „ Ilamkuyilkal “ |
| Mitgliedschaft seit 2005 | Tamilischer Kultur- und Wohlfahrtsverein Essen e.V. |
| Neu ab 2011 | Trinity College Examination UK |

...Spaß an Musik... von Anfang an!
Ich unterrichte Kinder ab dem 7. Lebensjahr. Unterrichtet wird zunächst nach der deutschen Methode. Nach mehreren Unterrichtsstunden und Interesse der Schüler, werden tamilische Lieder am Keyboard beigebracht.

**Musik**

"... Musik ist Kultur gewordene Natur... Melodien und Rhythmen wirken genau auf die Hirnregionen, die für die Verarbeitung von Trauer und Freude.

Musik fördert die Konzentrationsfähigkeit...
Musik hemmt Stress und Aggressionen...
Musik kann heilen...
Musik öffnet Türen: zu Erinnerungen
Musik ist eine Art "Schrittmacher" für Körper und Seele...

- - -

Musik bringt dich zum Lachen und Weinen
Musik lässt manch tristen Tag heller erscheinen
Musik gibt dir Kraft und Geborgenheit
Musik nimmt dir Sorgen und Einsamkeit
Darum schließe Musik fest in dein Herz hinein
Denn Musik wird dein steter Begleiter sein



Mit freundlichen Grüßen

***Raguram Thirunavukarasu***

*Essen den, 16.10.2010*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருக்கணித ஜோதிடம்"

Kreuzeskirch str.40
45127 Essen-Germany
Tel:- 0201.652450

தமிழர் கலாச்சார நற்பணி மன்ற
வெள்ளிவிழா 16.10.2010

சிவஸ்ரீ க.சபாநாதக் குருக்கள்
******

பிரதிஞாயிறுதோறும் தியான வகுப்பு நடைபெறுகிறது.
நடாத்துபவர் சிவஸ்ரீக.சபாநாதக்குருக்கள்
இணையவிரும்புவோர் தொடர்பு கொள்ளுங்கள்!

Ajanthan Juganathan
Kishanth Chandrakumar
Rashant Ravichandran
Rathishan Ravichandran
Atchya Arumugampillai
Diyana Srikaran
Priya Rasaiya
Presanti Tamilvanan
Thananjayan Sooriakumaran
Deniston Patpanathan
Kaveen Sethukumar
Kowshyan Navaratnam
MathushanThavarajah
NitharsanParansothy
Umesh Jeyakumaran
Abira Thayabaran
Anojh Thayabaran
Kajeeban Jeyajohnson
Raajivan Jeyabalan
Thurshikan Satkunakanthy
Sajanth Sivarangan
Tamilarasan Ketheesawaran
Nithusha Ketheesawaran
Arunjiah Ketheesawaran
Kishokaran Rasalingam
Sajanth Sivarangan
Yanusan Yogalingam
Sanjay Mahendiran
Jathavan Ganesalingam Sujyanthan Ganesalingam.
Kaveethan Kugathasan
Lithsushan Kiritharan
Sureka Manoharan
Aaraby Sureshkumar
Sujith Sanmugathasan
MaiyuZan Rajeswaran
Sageerthan Kodeeswaran
Thilakshan Kodeeswaran
Thivishan Kowtheeswaran















எசன் இளங்குயில் இசைக்குழுவினர் டென்மார்க் நாட்டில் இசைநிகழ்ச்சியை நடாத்தியபோது எடுக்கப்பட்ட படம்.
தாளவாத்தியத்திலும் ஒலியமைப்பிலும் திரு.சசி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAGUNATHAN

Alle Sprachen und Fachgebiete

www.uebersetzungen -ragunathan.de

**vom oberlandesgericht ermöchtigt**

**Dolmetscher-und Fachübersetzungsbüro**

Seit über 20 Jahren

| | | | |
|---|---|---|---|
| **Afghanisch** | **Chinesisch** | **Griechisch** | **Spanisch** |
| **Arabisch** | **English** | **Italienisch** | **Türkisch** |
| **Bulgarisch** | **Französisch** | **Niederländisch** | **Ungarisch** |

**alle Baltischen-Skandinavischen-Afrikanischen-Asiatischen Sprachen und alle sprachen aus dem Balkan.**

**Tel:(0208)99 o4 77**
**Fax:(0208)99 04 79**
**Mobil: 0171 89 122 69 Fax:(0201)99 04 79**
**E-Mail: Ragunathan.Dolm@t-online.de**

அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்ப்பு,மற்றும் அதனோடிணைந்த அத்தியாவசிய தேவைகளுக்கும் நம்பிக்கையோடு நாடுங்கள்!



# இளம்குயில்கள்

**இசைக்குழு எசன்**

# Ilamkuyilkal Isaikulu



Tel.: 0201 3307524
Mob.:0178 7407487
Essen, Germany

மங்கலகரமான நிகழ்வுகளுக்கு அழைத்து மகிழுங்கள் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Polizeipräsidium**
**Essen**

Polizeipräsidium Essen, 45117 Essen
Tamilischer Kultur- und Wohlfahrtsverein
Essen e.V.
Herrn Vorsitzenden
Masilamany Wijayakulasingam
Am Ringofen 21
45355 Essen

22. September 2010
Seite 1 von 1

Aktenzeichen:

(bei Antwort bitte angeben)

Petra Jackstien
Vorzimmer Polizeipräsidenti

Telefon 0201 829-1001
Telefax 0201 829-1009

@

**Einladung zum 25-jährigen Jubiläum**
Ihre freundliche Einladung vom 07.09.2010

Sehr geehrter Herr Wijayakulasingam,

für Ihre Einladung zum 25-jährigen Jubiläum, an der Frau Polizeipräsidentin Stephania Fischer-Weinsziehr, aus terminlichen Gründen leider nicht teilnehmen kann, danke ich Ihnen sehr.

Ich wünsche der Veranstaltung einen guten Verlauf und Ihnen und Ihren Gästen viel Freude.

Mit freundlichen Grüßen
Im Auftrag

Lieferanschrift:
Norbertstr. 165, 45133 Essen

Dienstgebäude:
Büscherstr. 2-6, 45131 Essen
Telefon 0201 829-0
Telefax 0201 829-2306
poststelle.essen@polizei.nrw.de
www.polizei.nrw.de/essen

Öffentliche Verkehrsmittel:
Straßenbahn Linie 106
Buslinie 160, 161
Haltestelle: Landgericht

Zahlungen an:
Landeskasse Düsseldorf
Kto-Nr.: 4 008 215
BLZ 300 500 00 WestLB AG

POLIZEIPRÄSIDIUM ESSEN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்க வகுப்பு : ஆரம்பம் 1996



## ஆசிரியர் சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன் அவர்கள்
ஆசிரியராகப் பணியாற்றினார்.

பலமாணவர்கள் இணைந்து பயின்ற போதும் மாணவர்கள் திரு.நகுஷாந்த் விஜயன்,செல்வன் அனுஷாந்த் விஜயன் ஆகியோர் நிறைவாகப் பயின்று ஆசிரியரின் ஆசீர்வாதத்துடன் 1.10.2005 அரங்கேற்றம் கண்டனர்.லண்டன் பரீட்சையில் சித்தியடைந்து மிருதங்கக் கலாஜோதி,பட்டங்களைப் பெற்று தொடர்ந்து கற்றும், கற்பித்தும் வருகிறார்கள்.பல மேடைக்கச்சேரிகளிலும் பங்குபற்றி வருகின்றனர்.அரங்கேற்ற நிகழ்வுகளுக்கும் பக்கவாத்தியம் வாசித்து மன்றத்திற்கும்,ஆசிரியருக்கும் எசன் நகரத்துக்கும் பெருமைசேர்த்து வருகின்றனர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்கம்



எமது மன்றத்தினால் நடாத்தப்படும் மிருதங்க வகுப்பில் மிருதங்கக் கலாஜோதி செல்வன்.அனுஷாந் விஜயனிடம் கற்றுவரும் மாணவர்கள்:
செல்வன்கள் சரவணன் தவலிங்கம்,ரமேஷ் மகாலிங்கம், ரூபேஷ் மகாலிங்கம் கரிபிரசாத் சிறிதரன்,சங்கர்சன், சிவதனுஷன் ஜெயந்திநாத சர்மா,இராகுலன் ரவீந்திரா ஆகியோர் கற்றுவருகின்றனர்.







***மிருதங்க கலாஜோதி திரு.நகுஷாந் விஜயன்*** *அவர்களிடம் மிருதங்கம் கற்றுவரும் மாணவர்கள்.*
*செல்வன்கள்: கஜன் சிவபாலன்,கிருஷாந்த் குணபாலசிங்கம்,நிதர்ஷன் மகேந்திரன், குறிஞ்சிநிலவன் தங்கேஸ்வரன்,சாயிபிரஷாத் சிறிதரன்,ராஜீவன் ஜெயபாலன்,பரத் விஜயசேகரன் அனீனன் தேவரவீந்திரன்,கார்த்திகன் லிங்கேஸ்வரன், ஜீவிந் குணரட்ணம்.*









***மிருதங்க கலாஜோதி திரு.நகுஷாந் விஜயன்*** *அவர்களிடம் மிருதங்கம் கற்றுவரும் மாணவர்கள்.*

***செல்வன்கள்:*** *கஜன் சிவபாலன்,கிருஷாந்த் குணபாலசிங்கம்,நிதர்ஷன் மகேந்திரன், குறிஞ்சிநிலவன் தங்கேஸ்வரன்,சாயிபிரஷாத் சிறிதரன்,ராஜீவன் ஜெயபாலன்,பரத் விஜயசேகரன் அனீனன் தேவரவீந்திரன்,கார்த்திகன் லிங்கேஸ்வரன்,ஜீவிந் குணரட்ணம்.*

***பழைய மாணவர்கள்:* சுதுசன் சிவஅருள்,மதுஷன் தில்லைநாதன், லகிபன் தர்மபாலன், திவாகர் சிவநேசன்,சந்தோஷ் ,சங்கீத் தங்கரட்ணம்,சுஜீவன் பாலேந்திரா,பர்ணபா,ஜோனா ஜெயபாலன்,ராகுலன் இராமநாதன், (அரங்கேற்றங் கண்டவர்) சாரங்கன் உதயகுமார், உமேஷ் ஆகியோர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப்பாடசாலை எசன் (10.1 0. 2003)



மானிட வாழ்வில்மிக இன்றியமையாதது தாய்மொழிக்கல்வியும்,அறநெறியுமாகும். புலம் பெயர்ந்து அந்நியதேசத்தில் வாழும் நமது குழந்தைகள் வெறும் இயந்திர மனிதர்காளக வளராமல் தம் இனத்தின் மீதும்,பிறர்மீதும்,அன்பு வைக்கவும், கருணைகொண்டு உதவவும் ஒழுக்கத் தோடு வாழவும் அறநெறிப்போதனை மிக அவசியமாகும்.



உலகிலுள்ள அனைத்து மதங்களும் அதையே செய்து வருகின்றன.இதை நன்குணர்ந்த பலரும் எம்மைநாடி சமயக் கல்வியை குழந்தைகளுக்கு ஊட்டும் படி வலிந்து கேட்டுக்கொண்டனர்.அந்த வகையில் திருமதி.பாலேந்திரா அவர்களும் கூடுதலான ஊக்கம் தந்தும் பாடசாலையில் பல ஆண்டுகள் கற்பித்தும், பணிபுரிந்தார்கள்.

சமயமாற்றங்களும், குற்றச்செயல்களும் அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் அவற்றை நீக்க சமயக்கல்வியின் அவசிமானது எனக்கருதி ஆரம்பிக்கப்பட்டதே எசன் அறநெறிப் பாடசாலையாகும்.

இதுவரை 60ற்கும் மேற்பட்ட மாணவர்கள் நேரமின்மை மற்றும், உயர்கல்விக்கு மத்தியிலும், சமயக்கல்வியை ஆர்வத்தோடு கற்று வெளியேறியுள்ளார்கள். தற் போதும் 50ற்கும் மேற்பட்ட குழந்தைகள் கற்றுவருகிறார்கள். தாய்மொழிக்கூடாக சமயக்கல்வியை கற்கும் போது தமிழறிவும் கூடுவதை நம் அனுபவத்தில் காண் கிறோம்.

சனிக்கிழமைகளில் வகுப்புகள் நடைபெறுவதால் (காலை 10.00 மணி தொடக் கம் 12.00 மணிவரை ) குழந்தைகளும்,பெற்றோர்களும் ஆர்வத்தோடு இணைகிறார்கள்.

கம் காமாட்சியம்பாள் ஆலய குரு சிவசிறி ஆறுமுக பாஸ்கரக்குருக்களும்,எசன் பிரம்மசிறி சுபசபாநாதக்குருக்களும், குழந்தைகளுக்கு நற்போதனைகளைக் கற்றுத்தருகிறார்கள்.

வருடாந்தம் கொழும்பு விவேகானந்த சபை பரீட்சைக்கும் தோற்றிவருகிறார்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசன் தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தின் 25 வது ஆண்டு விழாவுக்கு உளமார்ந்த வாழ்துச் செய்தி

1985ம் ஆண்டு,பெருமளவிலான தமிழர்கள் எசன்நகரில் குடியேறியபோது,நாம் எல்லோரும்,எமது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் யேர்மன்நாட்டவர்களிலேயே தங்கியிருந்தோம்.எம்மவர்களின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்வதற்கு ஒரு அமைப்புத் தேவையென்ற நோக்கில்,திரு.நயினை விஜயன் அவர்கள் எசன் சினிற்றர் வெக் என்ற இடத்தில் முதன்முறையாக இம்மன்றத்தையமைத்தார்.

இம்மன்றம் அங்கு வாழந்த மக்களுக்கு மட்டுமல்ல,எசன் நகரில் வாழ்ந்த சகல தமிழர்களுக்கும் பங்குபற்றும் நோக்கில் ஓர் விளையாட்டுப்போட்டியை ஏனைய மன்ற உறுப்பினர்களோடு இணைந்து நடத்திக்காட்டியது.இவ்விளையாட்டுப்போட்டியை திரு.நயினைவிஜயன் அவர்களே முன்னின்று நடாத்தினார்.

பல ஆண்டுகளாக இம்மன்றம் புலம்பெயர்தேசத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கில்,அறநெறிப்பாடசாலையொன்றையும் நடாத்தி வருவதோடு,எமது கலை கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் நுண்கலைக்கல்லூரிலையும் 20 ஆண்டுகளுக்கு மேலாக நிர்வகித்து,பல கலைஞர்களையும் உருவாக்கிவருவது நாடறிந்தது.இது சாதாரண விடயமல்ல. பல சிரமங்களையும் தாண்டிய இவர்களது பணி பாராட்டுக்குரியது.

தமிழருவிப் பத்திரிகைமூலம் தமிழையும்,எழுத்தாளர்களையும்,இசைக்கலைஞர் களையும் ஆண்டுதோறும் கௌரவித்துள்ளார்கள்.
குறிப்பாக இம்மன்றம் நடாத்தும் வாணிவிழா முக்கியமானதாகும்.
எசன் தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தின் 25 வது ஆண்டுவிழாவிற்கு வாழ்த்தை தெரிவிப்பது மட்டுமல்லாது அம்மன்றத்தின் பணி மென்மேலும் சிறப்புற எமது நிறுவனமான லக்கி Lucky Finance e.K,உறுதுணையாக விளங்கும் எனக் கூறி விடைபெறுகின்றேன்.நன்றி


தொடர்க உம்பணி

இவ்வண்ணம்
**வேலும் மயிலும் இராமகிருஷ்ணன்.**
உரிமையாளர் :Lucky Finance e.K. Essen.

---

2000 ம் ஆண்டு நடைபெற்ற வெளிநாட்டவர் ஆலோசனைச் சபையில் தமிழர்கள் சார்பில் தெரிவாகியவர்.இவர் முன்னாள் யேர்மன் தமிழர் நட்புறவுக்கழகத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.ஒன்றுகூடல்களையும், கலை விழாக்களையும் நடாத்தியவர் திரு.இராமகிருஷ்ணன் அவர்கள்..

(2005-2007 காலப்பகுதியில் திரு.நயினைவிஜயன் அவர்கள் நியமன அங்த்தவராகத் தெரிவானார்..




-மலர்க் குழு.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் மன வளர்ச்சி பிரச்சனை!

மருத்துவர்
மா.திருநாவுக்கரசு,
M.D

குழந்தைகளின் மன வளர்ச்சிக் குறைக்கான அறிகுறிகள் 3 வயதிலிருந்து 5 வயதிற்குள்ளாக தோன்றி விடுவதால் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு உருப்படியான மனிதனாக உருவாக முடிவதில்லை.இவ்வாறு இருக்கும் குழந்தைகள் பிற்காலத்தில் என்னவாகிறார்கள் என்று தொடர்ந்து கவனித்து வந்ததில் 10 விழுக்காடுதான் ஓரளவிற்கு தன்னைத்தானே பார்த்துக்கொள்கிற அளவிற்கு உள்ள மனிதனாக ஆகிறார்கள்.அப்படி சுமாராக முன்னேற்றம் அடைபவர்கள் என் னென்ன குணாதிசயங்களை கொண்டுள்ளார்கள் என்று பார்த்ததில் அறிவு வளர்ச்சி மற்றும் மொழிவளம் 5 வயதிற்குள்ளாக சுமாராக வளர்ச்சி அடைந்திருந்தால் 10 வயதிற்கு மேல் 14 வயதிற்குள்ளாக இத்தகைய குழந்தைகளுக்கு வலிப்பு நோய் ஏற்படுகிறது.

மற்றப்படி இக் குழந்தைகள் உடல் வளர்ச்சியில் நன்கு வளர்ந்து முதுமைப்பருவம் வரை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார்கள்.ஆனால் மன வளர்ச்சியடைந்து மற்றவர்களோடு ஒன்றிபழகிவாழ முடிவதில்லை .இதுதான் இந்த நோயின் நிலையாகும்.

இது பிறவியிலேயே உடல் உறுப்புக்களிலேயே அதாவது மூளையில் ஏற்படும் மாறுதல்களி னால்தான் இத்தகைய விளைவு ஏற்படுகிறது என்று கணித்துள்ளார்கள்.ஆரம்ப காலங்களில் குடும்ப சூழ்நிலைஇபெற்றோர்களின் இறுகிய மனப்பான்மை என்றும் சுற்றுப்புறத்தினால்தான் என்றும் கூறி வந்ததை உண்மையல்ல என்றுஇப்போஉணர்ந்திருக்கிறார்கள் .எனவே இத்தகைய நோய்க்கு காரணம் உடலியல் சம்பந்தப்பட்டதுதான் என்று முடிவு செய்துள்ளார்கள்.

.அடுத்து இதனை எப்படி சமாளிப்பதென பார்ப்போம்.

1)சாதாரணமாக ஒரு சராசரி மனவளர்ச்சி ஏற்பட ஊக்குவிக்க வேண்டும்.

2)அந்தக்குழந்தையிடம் உள்ள ஒரு இறுகிய மனப்பான்மையையும் ஒதைச்செய்தாலும் திரும்பத் திரும்பஒரே மாதிரி செய்துகொண்டிருந்தாலும் அதை குறைக்க முயல வேண்டும்.

3)விநோதமான வகையில் சமூகப்படுத்தப் படாமல் இருக்கும் வித்தியாசமான நடத்தை மற்றும் பழக்க வழக்கங்களை களையவேண்டும்.

4)இந்தக்குழந்தையினால் குடும்பத்தில் ஏற்படும் மன அழுத்தத்தை நீக்க வேண்டும்.

முதலில் கூறிய இந்த நடவடிக்கைகளை மாற்றி தேவையான நடத்தைகளை கற்றுக்கொள்ள நடத்தை மாற்றும் முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.அதாவது விரும்பத்தகாத நீக்கப்பட வேண்டிய நடத்தை முறைகளை நீக்கி தேவைப்படும் விரும்பத்தகுந்த நடத்தை முறைகளை கற்றுக்கொடுப்பதுதான் இந்த வைத்திய முறையின் முக்கிய அம்சமாகும்.இதற்கு பெகவியர் மொடிபிகேஷன் என்று பெயர்.அடுத்து மிக முக்கியமானது முடிந்தவரை இக்குழந்தைகளுக்கு மொழிவளத்தை ஏற்படுத்துவது. முதலில் இக்குழந்தைகளில் ஓசைகளை மட்டும் ஏற்படுத்தி மகிழும் குணத்தை நிறுத்தி சில வார்த்தைகளை உச்சரிக்க ஊக்கப்படுத்த வேண்டும். அடுத்து அந்த வார்த்தைகளை தகுந்த சமயங்களில் உச்சரித்து பயன்பெற ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறாக இக்குழந்தைகளை ஒரு அமைதியான சூழ்நிலையில் கட்டாயமான சமூகப்படுத்தப்பட்ட நிலையில் வாழ வழிவகை செய்யவேண்டும்.அவ்வாறு அக்குழந்தை மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் முறையை பலப்படுத்த வேண்டும்.

உதாரணமாகஅக்குழந்தையிடம் உரையாடமுற்படவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.அக்குழந்தை ஓசை ஏற்படுத்தி ஒலியில் வெளிப்படுத்தி மகிழ்ந்து வருவதை தடுத்து உச்சரிப்பை பயன்படுத்தி ஊக்குவிக்கவேண்டும் ஏதாவது ஒன்றை அக்குழந்தை வேண்டுமென்று சைகையால் கேட்கும்போது அப்பொருளின் பெயரைக் கூறி உச்சரிக்க கேட்க ஊக்குவிக்க வேண்டும்.அப்படி கேட்கும்போது அதை உடன் கொடுத்து அக்குழந்தையை திருப்தியடைய செய்ய வேண்டும். இதனால் குழந்தை இந்த வார்த்தையை உச்சரித்தால் இது கிடைக்கும் என்று உணர்ந்து அந்தப்பொருள் தேவைப்படும்போது அதை உச்சரிக்க முயலும். இவ்வாறாக அக்குழந்தை மொழிமூலம் தொடர்பு கொள்ள ஆரம்பிக்கும்.

அந்தக்குழந்தை தேவையில்லாத உபயோகமில்லாத செய்கைகளை திரும்பத் திரும்ப செய்வதை தடுக்கவேண்டும் .தடுக்கவேண்டுமேயொழிய கண்டிக்க கூடாது.அத்தகைய செய்கைகளை அங்கீகரிக்காமலும் நிராகரித்தும் குறைக்க வேண்டும்.அதே சமயம் உப யோகமான தேவையான நடவடிக்கைகளில் கவனத்தை திருப்பி அத்தகைய காரியங் களை செய்ய பழக்க வேண்டும்.

தன்னுடலிலே சில தூண்டுதல்களை உண்டு பண்ணி அதனால் உடலில் ஏற்படும் மாறு தல்களை தனக்குத்தானே அனுபவித்து மகிழும் குணத்தை மாற்றவேண்டும்.அதாவது உடலுக்கு அப்பாலும் உள்ள விஷயங்கள் மூலம் தொடர்புகொண்டு அதில் மாறுதல்களை ஏற்படுத்தி அந்த மாறுதல்களைஅனுபவித்து மகிழும் தன்மையை அந்தக்குழந்தைக்கு உணர்த்தவேண்டும்.அப்படி அது உணர்ந்தால் மேற்கொண்டு அதைசெய்து அதன் மூலம் பயனை அடையும்போது சுற்றுப்புறத் தொடர்பின் அத்தியாவசியத்தை உணர்ந்து வளர்த்துக் கொள்ளும்.

மேலே கூறிய அனைத்து முறைகளும் எழுதுவதற்கும் படிப்பதற்கும் இலகுவாக இருக்கும். ஆனால் நடைமுறையில் கடைப்பிடிப்பதென்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.சாதாரண விருப்பமுடன் தொடர்புகொள்ள நினைப்பவர்கள்கூட சில பழக்க வழக்கங்களை நீக்கியும் புதிதாக ஏற்படுத்துவதும் கடினமாகும்.அப்படி இருக்கும்போது சுற்றுப்புறத்தோடு தொடர்பு கொள்ளவே இயலாத ஒரு குழந்தை மாற்றுவதென்பது எவ்வளவு பெரிய காரியமென்று நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் ஒருமுகப்படுத்தப்படும் நோக்குடன் சேவை மனப்பான்மையுடன் ஈடுபட்டால்தான் இக்காரியத்தில் வெற்றியடைய முடியும்.இக்குழந்தையிடம் தொடர்புகொண்டு மாற்ற ஒரு வெறியுடன் ஈடுபட்டு மனநலம் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள்கூட உண்டு.எனவே இம்மாதிரி குழந்தைகளை ஒரு குழுவாக சேர்த்து 5-6 குழந்தைகளை எடுத்துக்கொண்டு ஒரு நபர் ஒரு முறையை அட்டவணைப்படுத்தி அதன்படி ஒழுங்காகவும் தொடர்ந்தும் கடுமையாகவும் பயிற்சி கொடுத்தால் மாற்ற இயலும்.அடுத்து. இத்தகைய குழந்தைகள் ஒரு குடும்பத்தில் இருந்தால். அந்தக்குடும்பத்தின் மனம் பாதிக்கப்படும்.அந்தக்குடும்பத்தினர் தீவிரமான அழுத்தத்திற்கு உள்ளாக நேரிடும்.எனவே அவர்களுக்கு தகுந்த ஆலோசனையும் ஆதரவும் உதவியும் அவ்வப்போது வழங்க வேண்டும்.

எந்த ஒரு குழந்தையும் நன்றாக வர வேண்டும்.நன்றாக இருக்கும் என்று நினைத்துத்தான் ஒவ்வொரு பெற்றோரும் தமது சுகங்களை துறந்து குழந்தைகளை வளர்த்து வருகிறார்கள். 80 விழுக்காடு திருத்தமாக வராது என்று தெரிந்தும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுவது எவ்வளவு கடினமாக இருக்கும் என்று நினைத்துப்பாருங்கள்.எனவே இந்த பெற்றோர்களை நன்கு பக்குவப்படுத்தி இந்த சூழ்நிலையை சமாளிக்க தயார்படுத்தி ஊக்குவிக்க வேண்டும்.இவையெல்லாம் கடினமான காரியங்கள்தான் உரிய முறையில் செய்தால் வெற்றி காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளி விழாவுக்கு நல் வாழ்த்துக்கள் தந்தோர் !

# சுருதிலயா இசைவகுப்பபு
## ஆசிரியை
## செல்வலட்சுமி சண்முகரட்ணம்.

த.க.ந.பணி மன்றத்தை கடந்த 25 ஆண்டுகளாக நடாத்தி வருவது, யாவரும் அறிந்ததே.கலை கலாச்சாரம் என்பவற்றை அழியவிடாது கடமை கண்ணியத்துடன் நடாத்தி வருவது மெச்சக்கூடிய விடயம்.பல மாணவ மாணவிகள் நடனம்,சங்கீதம் வாத்தியங்கள் சுரத்தட்டு, சமயம், போன்ற வற்றைக் கற்றுவருகிறார்கள்.இம்மன்றம் நடன மற்றும் மிருதங்க அரங்கேற்றங்களை நடாத்தியது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது.பரீட்சைளில் தோற்றி பட்டங்கள் பெற்று வருவது சிறப்புக் குரியது.உங்களின், பணி தொடர என் நல்லாசிகள் பொறுப்பாக இப்பணியைச்செய்து வரும் திரு. திருமதி.விஜயன் தம்பதிகளுக்கு எனது பாராட்டுக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும்.



## மனதார வாழ்த்துகிறோம்!
### ஆசிரியை ஆனந்தமாலா சிவநேசன்

நாற்றாய் நிற்கும் நம்செல்வங்கள் -பயிராகுமே நாளை எம்மண்ணில் தான்
நாடு போற்ற வாழ்ந்திட -நல்வழிகாட்டுமே நற்பணி மன்றம் தான்
கலையோடு வளம்காண -கலைத்தாயின் அருளோடு
கருத்தொருமித்துக் கரம்கொடுக்கும் -பெற்ற தாயாய் ஆகினர்
முத்தமிழும் அவருக்குள் -முத்தெடுக்கும் குழந்தைகள்
சத்தியத்தின் வாசம் நின்று -வெள்ளி விழாக் கண்டனர்
இவருக்கிணையாய் யாருண்டு -இன்பத்தமிழால் இசை பாடவைத்தனர்
இன்னும் பலதொண்டு பலகாலம் -நம் மண்ணுக்காய் இயற்றிட
தமிழோடு இசைகோர்த்து -இனிதாய் வாழ்த்துகின்றோம்!

## வெள்ளிவிழா வாழ்த்துக்கள்

Bhraanazvaasa

யேர்மனிய தேசத்தில் தமிழர் கலை கலாச்சாரங்களை, வித்திட்டு பராமரிப்பதிலும் பாதுகாப்பதிலும்,இன்னும் ஊக்கப்படுத்துவதிலும்,பெரும் பங்கினை வகித்துவரும்தமிழர் கலாச்சார நற்பணிமன்றம், எசன் 25 ஆண்டுகளாக ஆற்றிவரும் அயராத பணிக்காக எனது நல்வாழ்த்துக்கள்.இம்மன்றத்தின் ஸ்தாபகர் திரு.நயினைவிஜயன் அவர்களையும் ஊக்கம் கொடுக்கும் அவர் தம்குடும்பத் தினரையும் போற்றுகின்றேன்.
உங்கள்பணி இன்னும் சந்ததிகள் தொடர வாழ்த்துகின்றேன்.
ஓர் இனத்தின் கலை கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாக்கும் நீங்களும் அவ்வினத்தின் பாதுகாவலர்களே! நன்றி.

சங்கீதகலாஜோதி, நாட்டியகலாஜோதி, [illegible]
**ஒலிவியா தனபாலசிங்கம்** Dip.in.Music, Dip.in.Dance, Dip.in.Veena
**நிர்வாக இயக்குனர்,**
**பிரணவஸ்வாஷுா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Lucky Finance

**Engelbert str.15. 45127- Essen**



அதிகுறைந்த வட்டிவீதத்தில் அதிகூடிய
வங்கிக்கடனை பெற்றுக்கொள்வதற்கும்
,வங்கிக்கடன்களை குறைந்த வட்
டிவீதத்தில் புதிப்பிக்கவும் ,புதிய வீடு கட்
டுவதற்கோ ,வாங்குவதற்கோ, குறைந்த
வீதத்திலான கடனைப் பெற்றுக்கொள்
ளவும் ,மற்றும் ஏதும் காரணமாக வங்
கிக் கடனைப் பெற்றுக்கொள்ள
முடியாதவர்களும் வங்கிக்கடனைப்பெற
முயற்சிக்கவும் ,நம்பிக்கையுடன்
நாடுங்கள்

## Lucky Finance Essen

V.Ramakirishnan (Dolmetscher Sri)

**Tel:0201-9774957, 0171 36 06 240**



## தொலைக் காட்சி வானொலி இணைப்புச் சேவை!

**அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு!**

அதிநவீன தொழில்நுட்பத்துடன் பத்து வருடகால அனுபவத்துடன், செய்மதி தொலைக்காட்சி, வானொலி இணைப்பை 5 வருடகால உத்தர வாதத்துடன் ஏற்ப டுத்திக் கொள்ளவும். Strong, Humax, Tehnomate, Opeticun, ஆகிய Receiver களை 6 மாதகால உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும்.

Humax,Samsung,Tehnomate இவற் றுக்குரிய **Remote Control** ஐப் பெற்றுக்கொள்ளவும். (99.00 €) **Receiver** களை 2 வருடகால உத் தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும்.



**செ. முருகரத்தினம் (முருகா அண்ணா. ttn )**

Oberhausen 0208 81 06 786

Email: murugaratnam@gmail.com 0163 39 49 817



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசனில் முருகனாலயம் !



1989ல் கோல்டசிமிட் ஸ்றாச இல.5ல் வசித்துவந்த இளைஞர் களால் நிலக்கீழ் அறையில் வள்ளிதேவசேனாசமேத சிவசுப்ரமணிய சுவாமிகள் என்ற பெருநாமத்துடன் முருகன் குடிகொண்டான். பல ஆண்டுகளாக அதே இடத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. (2.5.1992 ல் அலைகள் சஞ்சிகையில் வெளிவந்த (செய்தி)

தற்போது கோல்ட்சிமிட் ஸ்றாச 49 ற்கு முன்னுள்ள மண்டபத்தில் கதிர்வேலாயுதசுவாமியாக அருள் பாலித்து வருகிறார்.கோயிலில்லா ஊரில் குடியிருக்காது முருகன் குடிகொண்டுள்ள ஊரில் தமிழர்கள் குடியிருந்து முருகனருள்பெற்று வாழ்கிறார்கள்.அயல்கிராமங்கயிலிருந் தும் பலர் வருகின்றனர்.கோவிலில் இசைநிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடாத்தி எமது மன்றம் பணி செய்துவருகிறது.



# தமிழர் விளையாட்டுக்கழகம் எசன்.

எசனில் வாழ்ந்து வருகின்ற இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்விளையாட்டுக்கழகம்,பல ஆண்டுகளாக தொடரந்து உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொண்டதோடு பல தடைவைகள் யேர்மன்தழுவியரீதியிலும் ஐரோப்பாவிலும் வெற்றிகளைக் குவித்துள்ளது. கல்வியும்,கலையும் ,விளையாட்டும் நல்ல சமுதாயத்தை உருவாக்குகிறது.எதிர்காலச் சந்ததிகளுக்கு நல்ல வழிகாட்டுகிறது..அந்தப்பணியில் இக்கழகம் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

அந்தவகையில் ஆரம்பகாலங்களில் திருவாளர்கள் சிங்கம்,சம்பந்தன்,அருள் (பயிற்சியாளர்) ரஞ்சன்,ரமேஸ்,வசி,சதீஸ்,கிசோர்,கஜன், மதி,செல்வா,கெனடி,சசி,கோபி,பாஸ்கரன்,நித்தி,டினேஸ், சீலன் இன்னும் பலரும் எசனில் விளையாட்டுத்துறையை ஊக்குவித்துள்ளனர்.இன்றும் பல போட்டிகளில் கலந்து கொண்டு இளையவர்களுடன் இணைந்து வெற்றிகளைப்பெற்று வருகின் றனர். இவர்களை,எசனில் தமிழர்களின் **வெள்ளிவிழா ஆண்டில்** ,இன்னும் இவர்கள் சாதனைகள் படைக்க எமது மன்றம் வாழ்த்துகின்றது. இளம்தலைமுறையினர் இக்கழகத்தின் நெறிப்படுத்தலில் இணைந்து விளையாடிவருகின்றனர். சாதனைகள் படைக்கட்டும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Umweltschutz,
# längst ein Thema für Jugendliche


S.Karthika.

Die Teilnahme der Jugendlichen an dem immer noch aktuellen globalen Thema:Umweltschutz,ist vielleicht damals sehr rege gewesen,aber langsam wachen viele Jugendliche durch die richtigen Unterstützungen der Erwachsenen auf und haben sich nicht nur aktiv beim "Europäischen Jugend-Klimagipfel" in Berlin beteiligt,sondern wollen der Umwelt auch durch ein paar einfachen Regel,die man im Alltag einhalten kann,unserer Erde helfen.Ein besonderer Hinweis ist auch dass schon 100 Jugendliche aus Europa bei dieser Veranstaltung teilgenommen haben und viele Tipps von den Experten bekommen haben.Neue Eindrücke und Ideen bewegen die Jugendliche nicht zur Verbesserung zur Umwelt sondern auch zu einer toleranten Gemeinschaft. Weltweite Freundschaften werden geknüpft und Eindrücke,Ideen werden ausgetauscht und sind ein Antrieb für die weitere Beteiligung an wichtigen Themen wie:Klimawandel,Wasserknappheit,Desertifikation.Viele Jugendliche schlagen vor,Infoveranstaltungen über die jetzige Lage unserer Umwelt zu organisieren,damit viele andere Menschen auch die Gelegenheit haben etwas über den jetzigen Zustand der Erde und Umwelt zu erfahren.Auch kleine Spenden an die jeweiligen Organisationen würden reiche Früchte tragen,denn kleine Beiträge sind wie bekannt große Taten.Engagierte Jugendliche raten allgemeine Verkehrsmittel zu nutzen statt mit dem Auto zu fahren,den Strom zu sparen wenn es nötig ist.An sonnigen Tagen kann man elektrisches ruhig auch ausschalten,auch Wasser nicht mehr zu benutzen als es nötig ist,sind ein paar einfache Regel die dazu beitragen die Umwelt und das Klima langsam aber sicher zu schützen.



„Gespenstisches" Konzert in der Geisterstraße

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா பூஜா துரந்தரர்
பிரம்மஸ்ரீ சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதசர்மா

சுவெற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் – ஆலய பிரதம குரு

**Tel:02304-16721**(கோவில்).02304-9109445 ,MOBIL:0177 20 16941



ஸ்ரீ கனகதுர்க்கா சரணம்

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்ற வரிகளுக்கு அமைய யேர்மன் நாட்டில் எசன்மாநகரில் வாழ்ந்து வருகின்ற ஈழத்தமிழர்கள்,தமது சமயம்,மொழி, கலை ,கலாச்சாரங்களை பேணிக்காத்து 25ஆண்டுகள் தமிழர் பண்பாட்டை,மேன்மைப்படுத்தி,இதன்மூலம் எதிர் காலச்சந்ததிகளுக்கு,நல் வழியைக் காட்டிய பெருமையுடன் வாழ்ந்து வருகிறார்கள். தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்தால் 1985ம் ஆண்டு நடாத்தப்பட்ட வாணிவிழாவுக்கு,பூசையை நடாத்திய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. 25 ஆண்டுகள் கடந்து 25வது வாணிவழா பூசையை நடாத்தும் பாக்கியமும் எனக்குக் கிடைத்துள்ளதானது அம்பாளின் திருவருளால்தான்.

சமய,கலை விழாக்கள்மூலம் சமூக ஒற்றுமையைப்பேணவும் மன்றம் வழிகோலியுள்ளது இது பெருமைக்குரிய விடயமாகும். வெள்ளிவிழா சிறப்பாக நடைபெறவும், ஈழத்தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவும்,யேர்மானிய மக்களும்,உலக மக்கள் அனைவரும்,என் அன்புக்குரிய திரு.நயினைவிஜயன் குடும்பத்தாரும் ஏனைய மன்ற உறுப்பினர்களும் மாணவமணிகளும் சிறப்பாக வாழவும் உங்கள் பணி மென்மேலும் வளரவும் எல்லாம்வல்ல ஸ்ரீ களகதுர்க்கா அம்பாளை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்

இவ்வண்ணம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவ.ஜெயந்திநாதக் குருக்கள்.சுவெற்றா.

## மனதார வாழ்த்துகின்றோம்.....!

தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் எசன் நடாத்தும் 25வது ஆண்டு வெள்ளிவிழா சிறப்பாக நடந்தேறவும்,நுண்கலைக்கல்லூரி,அறநெறிப்பாடசாலை மாணவ மாணவிகள் மென்மேலும் தம்அறிவை மேம்படுத்தவும் கலைவாணியின் அருள் கிடைக்கவும் மன்றத்தின் 25 ஆண்டுகாலப் பணியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வாழ்த்திய உள்ளங்கள்.....

சங்கீத ஆசிரியை திருமதி.மீரா நித்தியானந்தன், கவிஞர் காவலூர் ரவி,
திரு.திருமதி.திருநாவுக்கரசு,திருதிருமதி.லிங்கேஸ்வரன்,திரு.திருமதி.பாலேந்திரா
திரு.திருமதி.தர்மகுலசிங்கம்,திரு.திருமதி.பாலகுமாரன்,திரு.திருமதி.கலியுகவரதன்
திரு.திருமதி.சிவநேசன்,திரு.திருமதி.பாலசுந்தரம்,திரு.திருமதி.இராமநாதன்.
திரு.திருமதி.ஜெயபாலன்.திரு.திருமதி.இராஜேந்திரன்.திரு.திரு.திருமதி.ஜெயராசா.
திருமதி.சசிகலா,திரு.திருமதி.சிவதாஸ்,திரு.திருமதி.ஸ்ரீதரன்,திரு.திருமதி.விஜயசேகரன்
திரு.திருமதி.சிவபாலன்.திரு.திருமதி.ரவீந்திரசிவம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துமலர்

தமிழ்ப்பணி, கலைப்பணி என் உயிர்ப்பணியென தமிழர் நற்பணிமன்றம் செயற்பணி செல்கின்ற பாதையில், வெள்ளி முளைத்தது போல் இன்று வெள்ளிவிழாக்காணும் நாள் கேட்டு அகமகிழ்ந்தேன், பூரிப்படைந்தேன், புகழாரம் சூட்ட எழுத்துப் பூக்களை வசமாகத் தந்தேன்.

தெள்ளுதமிழ் கற்று தெவிட்டாச் சொல்கூட்டி
எல்லையில்லா இன்பக் கலைச் சுவையூட்டி
பல்லினமும் பரவிவாழும் தேசமதில் - நம் சந்ததிகள்
வல்லதமிழ் கலாசார வாசமது பரவவிட
தேடல் மிகு இவ்வலகில் தெவிட்டா நாதமதாய்
நாடிபலர் நாட்டங் கொளப் பணிபுரிந்து
காலத்தால் நிலைக்கும் புகழ்ப் பணியுழந்து
எண்ணியகருமம் எண்ணியாங்கு எய்து புகழடைய
நற்பணி சமயப்பணி யுமென நன்றிணைத்து
ஆலமர விருட்சமதாய் விழுதுகள் தாங்கிநிற்க
ஆடல் பாடல் அற்புதநாத மிருதங்க
அரங்கேற்ற அரும்பணிகள் ஆற்றி புகழ்
வாசமது புரிகின்ற தமிழ்நற்பணிமன்றம் வாழிவாழி - இவ்
ஆற்றல்மிகு தமிழ்நுண்கலைக் கல்லூரி வாழிவாழி
நீடுபுகழ் வாழ்தேசமது வான்புகழ வாழிவாழியென
வாயாரப்புகழ்ந்து வாழ்த்துமலர் தூவிநிற்கும்

சந்திரகௌரி சிவபாலன் B.A, Dip-in-Edu

(கௌசி) சோலிங்கன் ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எசன் அறநெறிப்பாடசாலையில் கற்றுவரும் மாணவர்கள்.



| | |
|---|---|
| சஜினி விஜயகுலசிங்கம், | தாருண்ஜா தர்மகுலசிங்கம் |
| தர்சிகா தர்மகுலசிங்கம், | தர்மிகா தர்மகுலசிங்கம் |
| தனுஜன் தயாபரன் | துஷிக்கா தயாபரன் |
| சுயானி லிங்கேஸ்வரன் | கார்த்திகன் லிங்கேஸ்வரன் |
| ஜெயந்த் ஜெயராஜா | ஜெனுசா ஜெயராஜா |
| ஜெனுசன் ஜெயராஜா | ஜெனாத் ஜெயராஜா |
| துர்ஷிகன் சற்குணகாந்தி | ஆர்த்திகா ராஜேந்திரன் |
| கலைவாணி ரவீந்திரசிவம் | ரபீனா ரவீந்திர சிவம் |
| ரவீனாஸ் ரவீந்திரசிவம் | கேதாரணி பாலசுந்தரம் |
| சிவன்ஜீவ் சிவதாஸ் | சிவன்ஜனா சிவதாஸ் |

## அறநெறிப் பாடசாலையின் பழைய மாணவர்கள்.

| | |
|---|---|
| ஜெனனி விஜயன் | பபிதா பாலகுமாரன் |
| கிறிஷ்டா பாலகுமாரன் | சுஜீத்தா பாலகுமாரன் |
| சோபிகா சரவணபவானந்தன் | சுதர்கினி சரவணபவானந்தன் |
| துஷாலினி சரவணபவானந்தன் | கம்ஷிகா ஜெயரட்ணம் |
| பிரணாளன் ஜெயரட்ணம் | கினோசாந்த் ஜெயரட்ணம் |
| சுஜீவன் பாலேந்திரா | அபிஷன் சிவஅருள் |
| சுதுஷன் சிவஅருள் | சாயகி சிவஅருள் |
| பானுஷா திருநாவுக்கரசு | கௌதிகா ராஜதாசன் |
| சபீனா ரவி | சபீனா கரிதாஸ் |
| ராகவி ஜெகநீதன் | புராதனி ஜெகநீதன் |
| ராகினி ஜெகநீதன் | லகன்ஜா சிவகுமார் |
| தர்மிகா விக்கினேஸ்வரன் | ஜெயனி ரட்ணமகேசன் |
| சனுஜா துரைச்சாமி | சர்னிகா துரைச்சாமி |
| கிரிஷாந்த் குணபாலசிங்கம் | வைஷ்ணவி குணபாலசிங்கம் |
| சங்கவி குணபாலசிங்கம் | கார்த்திகா சிவபாலன் |
| கஜன் சிவபாலன் | அபிராமி அசோகவர்த்தன் |
| சூர்யா அசோகவர்த்தன் | விஷ்ணு அசோகவர்த்தன |
| நிமலன் சாந்தகுமார் | நிருபா சாந்தகுமார் |
| கஜானி சாந்தகுமார் | அகிந்தன் யுகநாதன் |
| ஜதார்த்தனன் ராஜேந்திரன் | ராகவி ராஜசூரியர் |
| ரகுநாத் ராஜசூரியர், | மேனுஷா மேருகாந்தன் |
| மிதுஷா மேருகாந்தன் | ஜானா பாலராஜா |
| மயூர்ஷன் பாலராஜா | சாருஜா சச்சிதானந்தன் |
| சாயூரன் சச்சிதானந்தன் | சர்மிலன் சச்சிதானந்தன் |
| திலீபனா தர்மலிங்கம் | துஷாந்த் தர்மலிங்கம் |
| குறிஞ்சிநிலவன் தங்கேஸ்வரன் | விதுஷன் தங்கேஸ்வரன் |
| விஜிந்தன் | பிரவீன் தயாநிதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Ghatam

Unterteilt ist die Ghatam in Vai, den Mund und die Öffnung der Ghatam, die mit der Handfläche angeschlagen wird und einen warmen Basston ergibt. Außerdem kann man mit leichtem Öffnen und Schließen des Mundes den Klang variieren, der auf dem Korpus gespielt wird. Der Hals der Ghatam heißt Kaguthu, der mit dem Uddambu, dem Bauch, den Körper der Ghatam bildet.
Die Ghatam wird in der klassischen Musik Südindiens gespielt, auch Die Ghatam ist ein bauchiges, traditionell aus rotem Ton

ebranntes Perkussionsinstrument, das in Südindien heimisch ist. Meistens wird sie auf dem Schoß oder auf einem Standring (Vattam) mit den Fingern angeschlagen, wobei man beim Schlagen auf verschiedene Teile des Korpus viele Töne und Variationen bekommt.zusammen mit anderen Perkussionsintrumenten wie der Trommel Mridangam. In der westlichen Sphäre wurde die Ghatam unter anderem einem größeren Hörerkreis nahegebracht durch die Musik der von dem Jazzgitarristen John McLaughlin gegründeten Formation Shakti.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Kanjira

**Die Kanjira ist ein kleine Rahmentrommel aus Südindien mit einem einzelnen Schellenpaar. Sie wird zur Begleitung der klassischen Musik Südindiens benutzt.**

**Die Kanjira ähnelt in groben Zügen dem westlichen Tamburin; im Gegensatz zu diesem wird jedoch bei der Kanjira seltener von den Schellen Gebrauch gemacht. Sie wird in der linken Hand gehalten und mit den Fingern und Handballen der rechten Hand gespielt. Durch die lockere Spannung des Felles (traditionell meist Echsenhaut) sind Modulationen der Tonhöhe während des Spiels möglich - eine Technik, die auch bei der Bayan der nordindischen Tabla verwendet wird.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Morsing

**Eine Morsing ist die südindische Version einer Maultrommel und wird in der südindischen klassischen Musik als Rhythmusinstrument eingesetzt. Ihr Klang ist metallisch, hoch und schneidend laut und ergänzt somit gut einen dumpferen Trommelklang. Oft folgt sie wie ein Schatten den Rhythmusmustern der Mridangam, aber im Perkussionsensemble, dem Talabadia, trägt sie auch Solorollen. Neben der Mridangam, dem Ghatam und der Kanjira wird sie gerne als viertes Rhythmusinstrument in der carnatischen Musik eingesetzt. Oft wird die Morsing auch in einer Art Silbensprache, dem Konnakol eingesetzt.**

**Das Instrument hat einen kompakten Rahmen aus Eisen, Stahl oder Kupfer mit einer daran befestigten, freischwebenden Stahlzunge, welche lang übersteht. Der Rahmen wird nun mit der Handmuschel der linken Hand gehalten und an die leicht geöffneten Zahnreihen angelegt. Mit dem Mittelfinger der rechten Hand zupft der Spieler nun die Stahlfeder an, welche den Klang mittels Modulation des Mundraums und der Atmung erzeugt.**

**In Nordindien gibt es tiefer klingende Versionen der Morsing, die Morchang (Morsang) oder auch Bambusmaultrommeln aus Assam. Oft sind die Morchangs aus Messing oder Stahl und reich verziert.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Saraswati Veena

**Die südindische Saraswati Veena**

**ist traditionell eher ein Fraueninstrument,**

**ihr Spiel wurde von Damen der Bildungsbürgerschicht gepflegt. Das Instrument hat dieselbe Saitenanzahl wie die Rudra Vina, 24 Bünde und entspricht wie die Sitar einer Langhalslaute, besteht aber aus dem Holz einer zu den Brotfruchtbäumen gehörenden Art (Artocarpus hirsuta oder A. integrifolia). Korpus, Hals und Wirbelkasten werden bei den einfacheren Instrumenten separat ausgehöhlt und dann verleimt. Die Holzdecke wird ebenfalls aufgeleimt. Der bauchige Korpus (kudarn) hat eine nur leicht gewölbte Decke. Wenn das ganze Instrument aus einem Stück Holz gefertigt wurde, spricht man von einer Ekanda Vina. Diese hat einen besseren Klang und ist teurer. Ein zweiter, kleiner Resonator (soraikkai) aus Kürbis, Pappmaché, Metall oder Kunststoff befindet sich unter dem Wirbelkasten. Die Kanten sind mit gravierten Streifen aus dem Horn des Sambarhirsches oder aus hellem Kunststoff belegt. Diese Vina liegt beim Spielen quer vor dem Musiker. Der Korpus ruht dabei auf dem Boden, der Hals wird durch die beiden Knie des Spielers waagrecht gehalten. Der Hals endet oberhalb des Wirbelkastens als Yali Mukha mit dem Kopf eines Fabelwesens. Die gesamte Länge beträgt 130 bis 140 Zentimeter.**

**Das Plektrum (nagam) sitzt auf dem Zeige- und Mittelfinger, teilweise wird mit langen Fingernägeln gespielt. Der rechte kleine Finger greift in die Bordunsaiten. Der Spielbereich beträgt bei 24 Bünden im Halbtonabstand pro Saite zwei Oktaven. Mit den Bordunsaiten kann bei der Saraswati Vina und der Rudra Vina (wie auch bei der Sitar) die rhythmische Struktur (tala) gleichzeitig mit den Tönen (svaras) des Raga wiedergegeben werden. Die Möglichkeit,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**damit das Gesamtkonzept der indischen Musik darstellen zu können, macht die Wertschätzung dieser Instrumente aus.**


**Während der Nayaka-Dynastien besaß die Saraswati Vina in Thanjavur die heutige Saitenzahl, aber nur sechs Bünde. Dies wird von Rāmāmātya in seinem Werk Svaramelakalānidhi (1550) beschrieben. Er unterscheidet nach der Größe und der Stimmung der ersten Saite (Grundton / hohe Quinte / tiefe Quinte) drei Instrumente und von jeder Größe zwei Varianten: die Sarvarāga Vina mit festen und die Ekarāga Vina mit beweglichen Bünden.[11] Die Saraswati Vina soll Anfang des 17. Jahrhunderts vom Herrscher Raghunata Nayaka (1600–1634) und seinem Minister, dem verehrten Gelehrten Govinda Diksitar zur heutigen Form entwickelt worden sein. Im 18. Jahrhundert diente die Vina als Ausgangspunkt, um das 72-stufige Melakarta-System (auch: melas) zu entwickeln, mit dem die südindischen Ragas katalogisiert werden. In Südindien entwickelten sich an einzelnen Herrscherhäusern regionale Musiktraditionen. Am Hof von Thanjavur orientierte sich die Spielweise der Vina eng an der vokalen Gestaltung der Liedtexte. Der hiesige Stil, mit dem die Vina jedes Vibrato der Stimme mit besonderen Techniken der linken Hand nachzuahmen versuchte, erhielt daher den Namen Gayaki (ansonsten die Bezeichnung für nordindische Gesangsstile).[12] Bis Anfang des 20. Jahrhunderts wurde das Instrument in senkrechter Position gespielt.**

**Essen Murugan Temple**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25வது ஆண்டுவிழாக் காண்கின்ற எசன்- தமிழர் நற்பணி மன்றத்திற்கு எங்கள் நல் வாழ்த்துக்கள்!



*கடந்த கால்நூற்றாண்டு காலமாக நற்பணியாற்றி உயர்ந்து நிற்கும் எசன் தமிழர் நற்பணிமன்றத்தின் வளர்ச்சிகண்டு மனம்மகிழ்கிறது.*
*நிரந்தரமற்ற புலம்பெயர் மண்ணில் இனத்துக்காக, மொழிக்காக, இளந்தலைமுறைக்காக என்று நல்ல பல உள்ளங்கள் பணியாற்றிவருகின்றபோதிலும், தொடர்ச்சியாக கால்நூற்றாண்டு காலமாக இத்தகைய அரிய பணிகளை ஆற்றிவருவதென்பது ஒருசிலரால் மட்டுமே இயலக்கூடிய காரியமாக இருந்து வருகிறது.*
*இந்த அரும்பணியில் சிறந்துநிற்கும் திரு. நயினை விஜயன் அவர்களைப் பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை. அத்தகு சீரிய சிந்தனையாளர் அவர்.*
*பத்திரிகை, வானொலி, ஒளியமைப்பு என்று பல்துறைகளிலும் சிறந்திருக்கும் அவர், இளைய தலைமுறையினரிடத்து கலை கலாச்சாரத்தை வளர்த்தெடுப்பதிலும் வெற்றி கண்டிருக்கிறார்.*
*அவரது செயல்கள் மேன்மேலும் தொடரவும் இன்னும் பல்லாண்டுகளாய் நற்பணிமன்றம் தன் செயல்களை விரிவுபடுத்தவும் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.*
*எசன் நற்பணிமன்றத்தில் இணைந்து நின்றுசேவைபுரியும் நல்ல உள்ளங்களுக்கும் இந்த நற்பணிமன்றத்தின்மூலம் பலன்பெற்று இன்று சிறந்த கலைஞர்களாக மாறியிருக்கும் இளந்தலைமுறையினருக்கும் எனது பாராட்டுக்கள்.*
*எனது சார்பிலும் புங்குடுதீவு புனரமைப்பு ஒன்றியத்தின சார்பிலும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக மகிழ்கிறேன்.*

*வாழிய நம்மொழி!*
*வாழிய நற்பணி!*

*அன்புடன்*
*செ.செல்வகுமார்*
*தலைவர், புங்குடுதீவு புனரமைப்பு ஒன்றியம்*
*ராட்டிங்கன் - ஜெர்மனி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒரு முறை வாழ்ந்தாலும் தலைமுறை வாழ்த்த நாமும் வாழ்த்துகின்றோம்."

'எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்றல்ல பிற'

ஒருவன் தன் பிள்ளைகளுக்குத் தேடிவைக்கின்ற பெருஞ்செல்வம் கல்விச்செல்வம். இச்செல்வத்தை இப் பணிமன்றமானது எசன் நகரில் செவ்வனே வழங்கி வருகிறது.
ஆண்மீகம், கலாச்சாரம், பண்பாடு என்பவற்றோடு, தாய்மொழிக் கல்வியாம் தமிழ்

மொழியையும் புலம்பெயர்வாழ் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும்கற்றுக்கொள்ளும் வகையில் களமமைத்து, தமிழால் கலை வளர்த்த காலம் கடந்துகலையால் தமிழ் வளர்க்கும் காலமாகிவிட்ட இப் புலம்பெயர் வாழ்வியலில் தமிழை

உச்சரிக்க மறுத்திட்ட உதடுகளை கலையால் ஒருங்கிணைத்து, இசையால் வடிவமைத்து
வருடாவருடம் புதுப்புது கலைஞர்களை உருவாக்கி அவர்களை

அரங்கேற்றி சாதனைகள் படைத்து வருவது யாவரும் அறிந்ததே. இந்த மொழிப்பற்றும், கலையுணர்வும் கொண்ட இத் தமிழர் கலாச்சார நற் பணிமன்ற நுண்கலைக் கல்லூரி அறநெறிப் பாடசாலை 25ஆவது ஆண்டு வெள்ளிவிழாவைப் போன்று பற்பல ஆண்டு விழாக்களைக் கொண் டாடி சாதனைகள்படைத்திட வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

" புத்துணர்வு படைக்கும் இந்தப்
புலம் பெயர் வாழ்வினிலும்
நற்றமிழின் சேவைக்காய்
நற்பணியாற்றும் இந்த
நற்பணிமன்றத்தின் தாபகர்
நயினை விஜயனின் குலம் வாழ
நலம் வாழ வாழ்த்துகின்றேன்."

தமிழ்மணி. திருமதி. ஜெகதீஸ்வரி மகேந்திரன்.
(ஆசிரியை, தமிழர் கலையகம் டோட்முண்ட்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கலாசாரமும் புலம்பெயர் நாடுகளில் பெற்றோர் பங்கும்!

இவ்வுலகம் உருவாகி இலட்சக்கணக்கான ஆண்டுகளாகி விட்டன. உயிரினங்கள் உருவாகி பல ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆகிவிட்டன. அன்று தோன்றிய நாள் முதல் மனிதஇனம் பிறந்து இறந்து பின் புதிதாய்ப் பிறந்து எனத் தொடர்ந்து வாழ்ந்துவருகின்றது. இவ்வாறே மனிதஇனம் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதற்கு அம்மக்களிடம் இருந்துவந்த உறவுமுறைகளே காரணமாக இருந்திருக்கின்றன. ஆரம்பகாலம் உண்ணவும் உறங்கவும் வாழ்ந்த மனிதனின் சிந்தனை வளர்ச்சியுற்றதன் காரணத்தால், இன்று சிறந்த கலாசாரப் பண்புகளைக் கொண்ட மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையில் புலம்பெயர்வில் எமது இளந்தலைமுறையினர், கலாசாரம் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்ற போதும் அதைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு பெற்றோராகிய எம்மைச் சார்ந்தே இருக்கின்றது.

முதலில் கலாசாரம் என்றால் என்ன என்கின்ற தெளிவு எம்மத்தியில் ஏற்பட வேண்டும். கலாசாரம் என்பது வாழுகின்ற காலநிலை பௌதிகசூழலுக்கேற்ப மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கால ஆச்சாரமே கலாசாரம் எனப்படுகின்றது. இது ஒரு எழுதப்படாத சட்டமாக இருக்கின்றது. சுவாமி விவேகானந்தர் கருத்தும் இதுவேயாக இருக்கின்றது. கலாசாரம் என்னும் சொல்லானது பழந்தமிழ் இலக்கியங்கள் எதிலுமே காணப்படவில்லை. கல்சர் என்னும் சொல்லானது ஆங்கிலத்திலே வரலாற்றுத் துறையில் ஒரு பொருளிலும் மானிடஇயல் துறையில் வேறுஒரு பொருளிலும் கையாளப்படுகின்றது. கிரேக்கர் உயர் பண்புடமையை பண்பாடு என்கின்றார்கள். Mathew Arnold என்ற மொழி ஆய்வாளர் கூறும் கல்சர் என்ற சொல்லுக்குரிய விளக்கமானது பண்பாடு என்ற சொல்லுடன் பொருந்திவருகின்றது. இதே பொருளில் எமது பழந்தமிழ் இலக்கியங்களில் சொற்கள் கையாளப்பட்டிருக்கின்றன. உதாரணமாக "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என நெய்தற்கலி 16 இலேயும் வள்ளுவர் திருக்குறளிலே பண்புடைமை என்ற தலைப்பில் ஒரு அதிகாரத்தையும் கையாண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. எனவே கலாசாரம் என்பது பண்பாட்டுடன் பொருந்தி வருவதாக உள்ளது. பண்பு+படுதல், பண்பாடு எனப்படுகின்றது. எனவே மனிதனின் பண்பட்ட நிலையே கலாசாரமாகின்றது.

சிந்துவெளிநாகரிக காலத்துக் கலாசாரமானது அக்காலச் சூழலுக்கமைய அமைந்திருந்தது. சங்கம் தொட்டு இன்று வரை கலாசாரத்தில் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டுதான் வந்திருக்கின்றன. சங்ககாலத்தில் கள்ளுக் குடித்தல் ஒரு கூறாக இருந்தபோது அது குற்றமாகக் கருதப்படவில்லை. சமணர் வருகை அதைக் குற்றமாகக் காட்டியது. பெண்டீர் பலரை மணக்கும் வாய்ப்பு இருந்த போது அது பண்பாட்டுக் குறையாகச் சொல்லப்படவில்லை. எனவே காலத்துக்குக் காலம் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. Pascal Gisberd என்னும் அறிஞர் தன்னுடைய ஆய்விலே சூழ்நிலை சமூகநிலைக்கேற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உளம் சார்ந்து உருவாவதே கலாசாரம் என்கிறார். நிலத்தின் பண்பட்டநிலை அக்ரிகல்சர் (* Agriculture) *போல் மனதின் பண்பட்டநிலை கலாசாரம். எனவே மக்களது அறிவுநலம், கொள்கைநலம், ஒழுக்கநலம், வாழ்க்கைநலம் போன்றவை பண்பட்டநிலையே கலாசாரம் என்று முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இந் நலங்கள் எல்லாவற்றையும் எமது வளரும் தலைமுறையினர் அவர்கள் வாழுகின்ற சூழ்நிலையிலே பெறக்கூடியதாக இருக்கின்றது. இதற்குப் பெற்றோரின் கண்காணிப்பும் அவசியமாகின்றது.*

*ஒரு இனத்தின் குணநலன்கள் பிறப்பிலேயே வருவதில்லை. பிறந்தசூழல், வளரும், வாழும் சூழலுக்கேற்பவே அமையும். தொடக்கத்தில் இருந்த குணங்கள் பரிணாமவளர்ச்சி, அறிவுவளர்ச்சி மேம்பட விரிவடையும். வெவ்வேறு இனங்களாகப் பிரிந்து மாறுதலடையும் இல்லை மறைந்த போகும். இதுவே இன்றைய எமது இளந்தலைமுறையினர் நிலையாக இருக்கின்றது. எங்கள் இளந் தலைமுறையினர் சூழல் சுற்றம் நோக்கியே தம் வாழ்க்கைப் பாதையைக் கடக்கின்றனர் என்பது கண்கூடு. ஆனால் அவர்கள் காலில் சக்கரம் பூட்டப்பட்டிருக்கின்றது. கையில் மௌசை வைத்துக் கொண்டு உலகத்தையே காலடிக்குக் கொண்டுவருகின்றனர். அவர்கள் வெற்றிப்போக்கில் கலாசாரம் கண்ணுக்குத் தெரிவதில்லை. தாம் வாழுகின்ற சூழலுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்வார்கள். 1871ம் ஆண்டு ஆராய்ச்சியில், ஒரு ஓநாயுடன் சேர்ந்தே வளருகின்ற ஒரு மனிதக் குழந்தையானது ஓநாயுடைய இயல்புகளைப் பெற்றிருப்பதாக டார்வின் எடுத்துக்காட்டுகின்றார். சுற்றுச் சூழலில் இருந்து அகற்றப்படுகின்ற குழந்தை தண்ணீரிலிருந்து அகற்றப்பட்ட மீன் போலாகும் என்று கருதப்படுகின்றது. எனவே வாழும் சூழலிலுள்ள தவறான போக்குகள், அவர்கள் பாதையில் பங்கம் விளைவிக்கா வகையில் பெற்றோர் பார்வை நீருக்குள்ளும் நின்றபடி நீரின் சிறந்த அம்சங்களை பெற்றுக் கொண்டு வாழும் பக்குவநிலை போதிக்கப்பட வாழும் சூழலைக் கற்றிருக்க வேண்டியது அவசியமாகின்றது. சமுதாயவளர்ச்சிக்கேற்பத் தாமும் வளர்ந்திருக்க வேண்டியதும் கடமையாகின்றது.*

*கலாசாரம் என்பது தனிமனிதனைச் சார்ந்து நிற்பதன்று தனி மனிதர் பலர் சேர்ந்தது தான் இனம். இனம் பல சேர்ந்ததுதான் சமூகம். எனவே கலாசாரம் என்பது இனவழி சமூகத்தின் போக்கைத் தாங்கி நிற்கின்றது. காலங் காலமாக சிறந்த பல நற்பண்புகளைக் கொண்டதாகக் கருதப்படும் நமது தமிழ் கலாசாரமானது, புலம்பெயர்விலும் போற்றிப் பாதுகாக்கப்படல் அவசியமாகின்றது. ஒரு கலாசாரத்தின் மூலவேர்கள் மொழியும் திருமணமுமாகும்.*

*இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை உலகில் ஏதோ ஒருமூலையில் ஒரு மொழி அழிவதாக மொழியியலாளர்கள் தெரிவிக்கின்றார்கள். ஒரு மொழி அழிகின்ற போது அதன் பண்பாட்டு அம்சங்களும் அழிந்துவிடுகின்றன. உலகிலுள்ள 600 கோடி மக்கள் 6000 மொழிகளைப் பேசுகின்றார்கள். 3000 மொழிகள் ஆயிரத்துக்கும் குறைவானவர்கள் பேசுகின்றார்கள். அதிகமான மக்கள் பேசுகின்ற 20 மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாறான தமிழ்மொழி எமது கலாசாரத்தைச் சுமந்து செல்கின்ற வண்டியாகக் காணப்படுகின்றது. இப்புலம்பெயர்வில் தமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழியைக் கற்பிக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுவோர் குறைவாகவே இருக்கின்றார்கள். அந்தப் பெற்றோர்களுடைய பிள்ளைகள் கூட 500, 1000 அந்நியநாட்டுப்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலையில் 4, 5 பிள்ளைகளாகவே படிக்கின்றார்கள். அவர்கள் கூட ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் தமது கல்விமொழியையே பேசுகின்றார்கள். அதைவிடக் கூடிய நேரத்தை அந்நியமொழிக்காரருடன் செலவுசெய்யும் இவர்கள் வீட்டில் பெற்றோருடன் தமிழ்மொழியில் உரையாடுவார்கள் என்று பார்த்தால், வீட்டில் தொலைக்காட்சியுடனும் கணனியுடனும் தமது பொழுதைக் கழிக்கின்றனர். மொழி கற்பதற்காகத் தொலைக்காட்சித் தொடர்பை ஏற்படுத்தினோமேயானால், அதில் கலாசார சீர்கேடுகள் நிறைந்தே காணப்படுகின்றன. எனவே மொழியின் முக்கியத்துவம் நோக்கிப் பெற்றோர் தமது பிள்ளைகளின் மொழியறிவை அதிகரிக்கச் செய்யும் வகையில், மொழியில் கவர்ச்சியை ஏற்படுத்தவல்ல கலைகளைத் தமிழ் மொழியில் கற்பிப்பதன் மூலம் தமிழ்மொழியில் நாட்டம் கொள்ளச்செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

புலம்பெயர் மக்களுடன் தொடர்பு கொள்வதிலுள்ள இலகுத்தன்மையும் பண்பனுபவமும் நமது மக்களிடம் கிடைப்பதில்லை. ஆசிரியர் தொட்டு வைத்தியர் வரையுள்ள அந்நியோன்யப் போக்கு எம்மவருடன் பழகுவதில் எமது தலைமுறையினருக்குக் கிடைப்பதில்லை. மதிப்பு என்ற பெயரில் கண்டிப்பும், வரதட்சணை, தாலிகட்டல் என்ற பெயரில் பெண் அடக்குமுறையும் எமது கலாசாரத்தில் எம் இளஞ்சந்ததியினருக்கு வெறுப்பை ஏற்படுத்துகின்றது. இதுவே இலகுவாக நட்புரிமையுடன் பழகக் கூடிய புலம்பெயர் கலாசாரதில் விருப்பை ஏற்படுத்துகின்றது. முற்காலம் சமூகம் என்ற அமைப்பு சிறிய அளவில் கூட உருவம் கொள்ளாத காலம் அது. சமூகம் என்ற அமைப்பு உருவான காலத்தில், ஒரு சிலரே சேர்ந்து வாழ்ந்தனர். இச்சேர்க்கை ஒரு அமைப்பாக உருவாகும் வரைத் திருமணம் என்ற சமூக அமைப்புமுறை உருவாகவில்லை. ஊரை ஆளும் முறை வர தலைமுறைச் சொத்தாகச் சிலர் அநுபவிக்க விரும்பியபோது திருமணமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. எந்த உடைமையும் தேவையில்லையென இஷ்டம் போல் அலைந்து திரிந்தநிலை மிகப்பழையநிலை, பின் கால்நடைகள், ஆடவர் உரிமைகள், உடைமைகள் ஆயின, அதன் பின் நிலம் பெண்களின் முதல் உடமைகள் ஆயிற்று. நிலம் உடைமையாக அந்நிலங்களில் பயிர்ச் செய்ய ஆள்த் துணை தேவைப்பட்டது. ஆளைப் பெற்றுப் பெருக்க ஆண் துணை நிரந்தர தேவையாயிற்று. நிலத்தை நிரந்தர உடைமையாகக் காக்கவும் மற்றவர் இடையூற்றிலிருந்து மீட்கவும் பெண்ணுக்கு ஆண்துணை நிரந்தர முதன்மையாயிற்று. இதன் மூலமே திருமணம் என்ற அமைப்பு உருவாயிற்று என க.ப. அறவாணன் ஆய்ந்து தெரிவிக்கின்றார். திருமணம் ஒருவருக்கு ஒருவர் என்ற நிலையான உளநிலையிலிருந்து தவறி உடல்நிலைக்கு மாற்றப்படும் போது விவாகரத்து மலிவாகப் போகின்றது. இந்தத் திருமணமுறிவுகளுக்கு அடிப்படைக் காரணம் தனிக்குடித்தனமே என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். நாட்டின் அரசியலுக்கு ஆலோசகர் தேவைபோல் வீட்டின் அரசியலுக்கும் ஆலோசகர் தேவையே. இதற்கு அநுபவ பலம் மிக்க பெற்றோர் அருகிருப்பது அவசியமாகின்றது.

இப்போதுள்ள வரதட்சணை முறை ஆரியர் சார்பில் தமிழர்களிடம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். பண்டைக் காலத்தில் காதல்மணம் பெருவழக்காய் இருந்தது. காலப்போக்கில் கற்புமணம் முதன்மை பெற்றது. அக் காலப்பகுதியில், பெண்ணைப் பெற்றோர்கள் மணமகனுக்கோ மணமகன் பெற்றோர்க்கோ எதுவுமே கொடுத்ததில்லை. பெற்று, வளர்த்து, ஆளாக்கி நல்வழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்திய பெண்ணை ஆண்மகனுக்குக் கொடுத்த பெற்றோர், வேறு யாது கொடுத்தல் வேண்டும். ஆனால் பெண்ணைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் ஆண்மகன் பெண்ணின் தாய்க்குப் பால்க்கூலி அல்லது முலைக்கூலி அன்பளிப்பாக அளிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. பழங்குடிகளிடம் ஆடு, மாடு, நிலம், பொருள் ஆகியவற்றைப் பெண்ணின் பெற்றோருக்குக் கொடுத்துப் பெண்ணை எடுக்கும் வழக்கம் இருந்தது. ஆனால், இன்றுள்ள நிலை பெண்பிள்ளையைப் பெற்றோர் ஆண்மகனுக்கு வரதட்சணை கொடுத்தலாக ஆரியமுறைப் படி புலம்பெயர்ந்தும் தொடர்கின்றது. இந்நிலையில் வெறுப்புக் கொள்ளும் எமது இளந்தலைமுறையினரின் வெறுப்புக்குப் பெற்றோர் ஆளாகாமல் இருப்பதும் அவசியமாகப்படுகின்றது.

இவ்வாறு எமது மக்களிடம் காணப்படும் சில தவறுகளைக் கூர்ந்து நோக்கும் எமது இளஞ்சந்தியினர் அந்நிய கலாசாரத்தை நாடிச் செல்வது தவிர்க்க முடியாது போகின்றது. இன்று இளஞ்சந்ததியினரிடம் அடித்தளமாய்க் காணப்படுவது மொழிக்கல்வி, அறிவு, பொது அறிவு, மனவளர்ச்சி, வாழ்க்கை வசதி போன்றவையே. இவற்றில் நாட்டம் கொள்கையிலே கலாசாரம் தவறிவிடுகின்றது. முற்றுமுழுதாக அந்நிய கலாசாரத்தின் மத்தியில் வாழும் எமது இளந்தலைமுறையினர் பெரும் இக்கட்டான சூழ்நிலையிலே தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களைக் குறை கூறமுடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். எனவே அவர்கள் மனநிலையைப் புரிந்து விட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்து, அவர்கள் அருகிருந்து நாட்டைக்கற்று, சூழலைக்கற்று, நமது எதிர்கால சந்ததியினரை எமது கலாசாரத்துடன் வாழவைத்து, அவர் தம் பெருமையினை உலகறியச் செய்ய வேண்டிய பெரும்பணி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பம் எம்மால் முடியாது என பெற்றோர் ஒதுங்கும் பொழுது பிள்ளைகள் குறைநிறைகளை அவதானிக்க முடியாமல் போகின்றது. நல்ல ஒரு சமுதாயத்தை நல்ல ஒரு கலாசாரத்தைப் புலம்பெயர்வில் கட்டிக்காக்க முடியாது போன பெரும் பழி பெற்றோர்களிடம் வந்து சேர்கின்றது.

சந்திரகௌரி சிவபாலன் B.A, Dip-in-Edu
(கௌசி) சோலிங்கன் ஜேர்மனி

**தூய்மையான இதயம் கொண்டவர்கள்,யாருடைய நம்பிக்கையையும் குலைக்கமாட்டார்கள்**

**-பகவான் இராமகிருஷ்ணர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது மன்றத்தால் வெளியிடப்பட்ட **அலைகள்** சஞ்சிகை வெளியீடு 2..5.1992 ல் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இடம்:பெற்றது.நிகழ்வில் ஆசிரியர் நயினை விஜயன்,உதவி ஆசிரியரகள் திருமதி.கிருஷ் ணவேணி சிறிகந்தவேள்,யேர்மன் தமிழர் நட்புறவுக்கழகப் பொறுப்பாளர்

திரு.வே.ராமகிருஷ்ணன்,கலாநிதி.றொபின்சன்,,திரு.செ.இந்திரகுமார் ஆகியோர்.......!

இறைவனுக்கும் உங்கள் நாட்டிற்கும்,உங்கள் நணபனுக்கும் உண் மையாயிருங்கள்.அப் பொழுது தான் நீங்கள் எவருக்கும் ஒரு போதும் வஞ்சகம் செய்யமாட்டீர்கள்.

- கென்றி வாண்டைக்.

ஆயிரம் நண்பர்கள் இருப்பதில் பெருமை இல்லை ஒரு எதிரிகூட நமக்கு முளைத்துவிடாமல் பார்த்துக்கொண்டால் தான் பெருமை.

-எமர்ஸன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசனில் உங்களுக்கு அருகாமையில் ஓர் இந்திய உணவகம்
அறுசுவை உணவுகளுக்கு என்றும் நாடுங்கள்

Indisches Spezialitätenrestaurant

# Shere Punjab



Elisabethstr.7
45879 Gelsenkirchen
Tel:0209 / 206763
Fax:0209 / 1485021

Moltkerstr.10
45128 Essen
Tel:0201/2488400

**Naseeb Catering by Shree Punjab**
**Direct errichbar unter 172 / 5332149**
**Inhaber:Gurmukh Singh Natt**
**Besuchen Sie uns auch im Inetrnet:www.sherepunjab.de**

---





**எமது மன்றத்தால் நடாத்தப்படும் சிறுவர்களுக்கான இலவச கணனி வகுப்புகள்**
**ஆசிரியை திருமதி.சோன்ஜா அவர்கள்.**
**2ம் ஆண்டு படிக்கும் சிறுவர் சிறுமியர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.**

மேலதிக விபரங்களுக்கு:
திருமதி. சொன்ஜா,திருமதி.சசிகலா விஜயன்
0201-330 7524

மூத்தோருக்கான. கணனி வகுப்புகளும் நடைபெற்றுள்ளது.கற்க விரும்புவோருக்கு வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்ட நடன வகுப்பு:10 ஆண்டுகள்.

**ஆரம்பம் : 1993 -2002**

*நடன ஆசிரியை திருமதி.கிருபாநிதி இரட்ணேஸ்வரன் அவர்களால் 6.3.1992ல் ஆரம்பிக்கப்பட்ட நடன வகுப்பு அவர்(4.4.1994 புலம்பெயர்ந்ததால் செல்வி சுகன்ஜா சிவசுதன் அவர்களை ஆசிரியையாகக் கொண்டு* **Jugend Zentrum** *ல் பிரதி வெள்ளிதோறும் எமது மன்றத்தால் நடாத்தப்பட்டது.(22.4.04-27.11.1999) பின்னர் நடன ஆசிரியர் பரதகலாவித்தகர் திருமதி.அற்புதராணி கிருபராஜ் அவர்களினால் தொடர்ந்து பயிற்றப்பட்டு அரங்கேற்றங் கண்டனர்.(11.1.2000 – 23.10.2002)*

### இணைந்த மாணவிகள்

*உமா சாம்பசிவம்* (28.8.1995ல் அரங்கேற்றம் கண்டவர்)

*(அரங்கேற்றியவர் நடன ஆசிரியை நர்த்தனப்பிரியா செல்வி சுகன்ஜா சிவசுதன் )*

*ஜெனனி விஜயன்* (Dip.in.Dance London) *(7.9.2002 ல் அரங்கேற்றம்)*
*பபிதா பாலகுமாரன்* *(23.10. 2002 ல் அரங்கேற்றம்)*
*தர்ஸனா,தர்மபாலன்* (Dip.in.Dance London) *(23.10.2002 ல் அரங்கேற்றம்)*
*லக்சனா தர்மபாலன்,* *(23.10.2002 ல் அரங்கேற்றம்)*

(அரங்கேற்றியவர் ஆசிரியை பரதகலாவித்தகர் திருமதி.அற்புதராணி கிருபறாஜ்)

*கிறிஸ்டா பாலகுமாரன்*
*சரண்ஜா தங்கரட்ணம்*
*சயானா சூரியகுமாரன்*
*அனுஷாந்த் விஜயன்*
*சபீனா கரிதாஸ்*



இவர்கள் பல ஆண்டுகளாக தாயக நிகழ்வுகளில் நடன நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக வழங்கிப் பலரினதும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றுக்கொண்டனர்.எமது மன்றத்தால் நடாத்தப்பட்ட நிகழ்வுகளிலும் பல ஆண்டுகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.ஜெனனி சிவதாஸ்,பபிதா கஜபவன் ஆகியோர் நடன ஆசிரியைகளாகப் பணியாற்றுகிறார்கள். தாம் பயின்ற கலையை அடுத்தசந்ததிக்கு பாரப்படுத்தும். பணியில் தம்மை இணைத்துள்ளார்கள்.

யேர்மானிய மக்களுக்கு எமது இனத்தின் பாரம்பரியக் கலையான பரதத்தின் சிறப்பை 10 ஆண்டுகளுக்கு மேலாக தாயக உணர்வோடு இவர்களின் பாதங்கள் சலங்கைகொண்டாடியது,இவர்கள் பூங்கரங்கள் விலங்கொடிக்க அபிநயம் தந்தன!





நடனத்துறையில் 5 அரங்கேற்றங்களைக்காண 10 ஆண்டுகள் கடந்துள்ளன.பெற்றோரின் பொறுமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகளின் ஆர்வமும்,ஆசிரியைகளின் ஒத்துழைப்பும் எமது மன்றத்தின் தளராத பணிக்கு உர மூட்டியுள்ளது.கலையார்வங்கொண்ட பெருமக்களின் ஆசியும் வாழ்த்துக்களும் கூட கைகொடுத்தது.

## நிகழ்வுகளின் நிழல்கள்................!




அன்னைக்கு
விழாவெடுத்து
அஞ்சலித்தபோது...!



காற்றின் முகவரி எம் கதை பேசட்டும்... முதலாவது தமிழருவி விழா-1993---













தாய்மொழியைக் கற்கவும் பேசவும் சிலர்
பின்னிற்கும் போது, தமிழ் கற்று அதைப் பாடவும்,
தாளத்தோடு ஆடவும் இப்பிஞ்சுகள் புலத்தில் கலை
வளர்ப்பது போற்றுதற்குரியது அல்லவா!
தேவாரம் இசைக்கும் கழந்தைகள் ஒருபுறம்,
ஓவியப்போபட்டியில் தூரிகை கொண்டு .......
பாவலர் கந்தையா ராஜமனோகரனின் சமயப் பட்டறையில்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் கலாச்சாரத்தின் மத்தியில் வாழும் எமது தலைமுறைகள்.!

மண்ணிலே மனிதனாய்ப் பிறந்தவர்கள் தம் எண்ணக்கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும், அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்குமான ஒருதொடர்பூடகமாக இருப்பது மொழி. இம் மொழி நாட்டுக்குநாடு, இனத்திற்கு இனம் என்ற அடிப்படையில் வேறுபட்டுக்காணப்படுகிறது.

ஒரு இனத்திற்கு அடையாளம் மொழியே அன்றி, கலாச்சாரமோ பண் பாடோ, பழக்கவழக்கமோ இல்லை. ஏனெனில், அவைநாகரீகத் தாக்கத் தினால் காலத்திற்குக் காலம் மாறுபடக்கூடியன. அந்த இனத்தின் அடையாள மொழியே அவ்வினத்தின் தாய்மொழி. ஒருவர் எத்தனை மொழிகளைவேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம் தவறில்லை ஆனால், அறிவு வளர்ச்சிக்கு அவரவர் தாய்மொழியே அடிப்படை. என் பது உளவியலாளரின் கருத்து.

"பெற்ற தாயைவிட உற்றதாய்மொழி உயர்ந்தது" என்பார்கள். புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எம்மைப் பொறுத்தமட்டில் எமது தாய்மொழி தமிழ் ஆனால், நம் பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் வாழ் கின்ற வாழ்விட மொழியையே தத்தமது தாய்மொழியாகவும், தமிழை துணைமொழியாகவும் கற்று வருகிறார்கள். காரணம் அவர்களின் கல்வி, கலாச்சாரம், பழக்கவழக்கம், நட்பு எனப் பலதும் அவர்களது வாழ்விடமொழியாக இருப்பதே. ஆனால்,

பெற்றோராகிய நாமோ அவர்களுக்கு எமது கலாச்சாரம், பண்பாடு, ஆண்மீகம் எனப் பலவற்றை அவர்களுக்கு ஊட்டுவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டி வருகின்றோம். பிள்ளைகளோ இரட்டைக்கலாச் சாரத்தின் மத்தியில் வாழும் தலைமுறைகள். இருப்பினும் வாழ்விடக் கல்விமுறையில் நாம் விரும்பியோ, விரும்பாமலோ பல மொழிகளை அவர்கள் கட்டாயம் கற்கவேண்டியுள்ளது. அதேபோல எமது இனஅடையாள மொழியெனக் கருதி தமிழ்மொழியைக் கற்பித்தல் பெற்றோராகிய எமது கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

ஒரு மனிதனின் பொற்காலமாகக் கருதப்படுவது அவனது கல்விக் காலம். ஆரம்ப காலங்களைவிட இப்போது புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பல

தமிழ்மொழிக் கல்விக்கூடங்கள், வானொலிகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் என எத்தனையோ வாய்ப்புக்களும் வசதிகளும் உள்ளன. அவற்றை உரியமுறையில் பயன்படுத்தியாவது எமது தாய்மொழியை அறிந்து கொள்ளலாம். இவற்றைப் பயன்படுத்தி மொழியில் உயர்வும் சிறப்பும் அடைந்த எமது தலைமுறைகள் எத்தனை எத்தனை. அவர்களால் முடியுமென்றால் அவர்களைப் போன்று இரட்டைக் கலாச்சாரத்தில வாழும் மற்றவர்களால் ஏன் முடியாது? "முயன்றால் முடியாதது எதுவும் இல்லை." இசையால் வசமாகா இதயமேது என்பது போல் பிள்ளைகள் கலைத்துறையில் காட்டிவரும் ஆர்வமும், முன்னேற்றமும் கண்டு வியப்படைகிறோம்.

தமிழால் கலை வளர்ந்த காலம் மாறி கலையால் தமிழ் வளரும் காலமாகிவிட்ட இப் புலம்பெயர் வாழ்வியலில் இளையோர்களின் பங்கு பாராட்டப்பட வேண்டும். நம்மவர்களை மட்டுமல்லாது வாழ்விடச் சமூகங்களையும் தம்பக்கம் ஈர்த்து வருகின்றனர். இசைத் துறையைப் போல் முச்சங்கங்கள் வளர்த்த எம் தமிழை

முழுமூச்சாய் வளர்த்தெடுத்து அடுத்தவர் மொழியை அரணைத்துக் கொண்டாலும் கருக்கொடுத்த தாய்மொழியை கண்ணாய் காத்து அடுத்த தலைமுறைக்கும் நகர்த்திச் செல்லும் பொறுப்பு இப்புலம்பெயர் வாழ் தலைமுறைக்கே உரியது. இரட்டைக் கலாச்சாரத்தின் மத்தியில் வாழும் தலைமுறைகளே! உங்கள் இனத்தின் அடையாள மொழியாகிய தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பாத்திரமானவர்களாக இருக்காவிடினும் பங்காளியாகவாவது இருப்பீர்களாக!

**"நாம் புலம்பெயர்ந்து வாழ்கின்றோமே தவிர புலனிழந்து வாழவில்லை."**

*தமிழ்மணி. திருமதி.ஜெகதீஸ்வரி மகேந்திரன்.*
*(ஆசிரியை தமிழர் கலையகம் டோட்முண்ட்)*

**MoneyGram®**
**International Money Transfer** ®


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாவைக் கொண்டாடும் தமிழர் கலாச்சார நற்பணிமன்றத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்.!





# த யாழ் ஸ்ரோர்ஸ்
# THE YARL STORES

உங்கள் வீட்டுக்குத்தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களுக்கும்
தரமான மரக்கறிவகைகளுக்கும்,உடன் இறக்குமதிசெய்யப்பட்ட
கடலுணவு வகைகளுக்கும்,நிறைந்த தரத்தில் குறைந்த
விலையில் பெற்றிட நாடுங்கள்.
எசனில் இருந்து பொருட்களுக்கு ஓடர்
செய்வோருக்கு வீட்டுக்கே-
கொண்டுவந்து தரப்படும்.


தொலைபேசி: 02181 - 272008

முகவரி : THE YARL STORES DUISBERG (HOCHFELD)
HEER STR. 104, 47083 DUISBERG

9 இருக்கைகள் கொண்ட VAN வாடகைக்கு விடப்படும்.



# MVN



*Ampal Video*
*Essen .for*
*HD - DVD Recording*

*நவீன தொழில்நுட்ப முறையில்*
*வீடியோ படப்பிடிப்புகளுக்கு*
*நாடுங்கள்! அம்பாள் வீடியோ எசன்!*
*மங்கலகரமான நிகழ்வுகள்,*
*மேடைநிகழ்வுகள்,அரங்கேற்றங்கள்*
*அனைத்தும் மிகத் துல்லியமாக*
*பதிவுசெய்து தரப்படும்! மணவறை*
*அழைப்பிதழ்கள், மண்டப*
*அலங்காரம்,பூமணவறை*
*அனைத்திற்கும் நாடுங்கள்*



Nagu+Anish Tel:0201-3307524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Lathan

## MOBILE TEXTILE

டென்மார்க் நாட்டில் 15 ஆண்டுகளுக்கு மேலாக
தனி முத்திரை பதித்ததுLathan Mobile Textile

அனைத்துவகை ஆடைத்தெரிவுகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**Lathan Mobile Textile Denmark.**

தீபாவளித் திருநாளை முன்னிட்டு விசேட
மலிவு விலையில்! முந்துங்கள்!!1தொடர்புகளுக்கு

**Undervorket**

**Stemannsgade-9c 8900-Randers**

**Tel:40737632 , 71353500**





# Rytham

*Hobby Music Group*

**டென்மார்க்.**

உங்கள் மங்கலகரமானநிகழ்வுகளில்
இன்னிசைகேட்டு மகிழ்ந்திட
அழைத்து மகிழுங்கள்!

தொடர்புகளுக்கு

**Sasi 0045—21852402**

இசையால் வசமாகா இதயம் எது!
எங்கள் இசையில் உங்கள் நிறைவு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org